பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 11 புதன்கிழமை (27-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:01

## உதயன்

## உறுதி கூறுகிறான் 'உதயன்'

உங்கள் உதயனுக்கு இன்று பதினேழு வயது பூர்த்தியாகின்றது. பதினெட்டு வயதுக் கட்டிளமைப் பருவத்தில் காலடியெடுத்து வைக்கிறான் அவன்.

ஈழத் தமிழர்களின் நியாய பூர்வமான உரிமைப் போராட்டம் ஆயுத வழி திரும்பிய காலகட்டத்தில் – காலத்தின் தேவை கருதி – காலத்தின் கட்டாயத்தை நிறைவு செய்வதற்காக – முகிழ்ந்தான் உதயன்.

யுத்த அனர்த்தங்களுக்கு மத்தியில் பிறந்து, யுத்த அவலங்களுக்கிடையே தன் பணி தொடர்ந்த உங்கள் உதயனுக்கு உங்களைப் போலவே நெருக்கடிகளும் யுத்தப் பாதிப்புகளும் அந்நியமானவை அல்ல மிகவும் பரிச்சயமானவை.

யுத்தத்தின் அவலத்தில் – போரின் கொடுமையில் – முகம் குப்புற வீழ்ந்தபோதெல்லாம் குடாநாட்டு மக்களாகிய உங்களைப் போலவே அவனும் துவண்டுவிடவில்லை. தமிழ் மக்களைப் போல அவனும் சளைக்காமல் அதே உக்கிரத்தோடு எழுந்து நின்றான். அதே வீறாப்போடு தமிழர் தம் போராட்டத்தின் அறத்தைத் தொடர்ந்து முரசறைந்தான்; தமிழரின் உரிமைக்குரலை உலகெங்கும் முழங்கினான். வீரத் தமிழ் மறவர்களின் தியாகத்தையும், அதன் பின்னால் இருந்த நியாயத்தையும், நியாயத்தோடு நீதி கேட்கும் தமிழர் தலைமையின் பெருமையையும் அவன் பேசத் தவறவில்லை. காட்டிக் கொடுப்புக்களையும் காக்கை வன்னியர்களையும் மக்களிடம் காட்டிக் கொடுத்து அம்பலப்படுத்தவும் தமிழரின் பெயரால் பதவிக் கதிரைகளை அலங்கரித்து தமிழரின் போராட்டத்தை – எலும்புத் துண்டுகளுக்காக வாலாட்டும் நாய்கள் போல அடிமைப்பட்டு – விலை பேசி விற்க முயன்ற பேடிகளின் முகத்திரைகளைக் கிழித்து உண்மை சொருபத்தை பகிரங்கப்படுத்தவும் அவன் பின்னிற்கவில்லை.

இந்தப் பணிக்காக காலப் பரிணாமத்தில் அவன் சந்தித்த இடையூறுகள் பல.

ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்கள், இந்தியப் படைகளின் தாக்குதல்கள் -- நெருக்குதல்கள் – மிரட்டல்கள், விமானப் படையின் நேரடி வான்வழிக் குண்டு வீச்சுத் தாக்குதல், பத்திரிகைக் காரியாலயம் சீல் வைப்பு, கல் லெறிகள், இடம்பெயர்வுகள், கைக்குண்டுத் தாக்குதல், களப்பணியாளர்களுக்கு எதிரான வன்முறைகள் என்று பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு அவன் முகங்கொடுக்க வேண்டியவனானான். இந்தக் கொடூரங்களின்போது அவனது ஊழியர்கள் சிலர் தமது உயிரை விலையாகக் கொடுக்க வேண்டியதாயிற்று. சிலர் காயமுற்று குடாநாட்டு வாழ்விலிருந்து தள்ளியிருக்க வேண்டியவர்களானார்கள். சிலர் களப்பணி கருதி தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டியதாயிற்று. நிர்வாகமோ சொல்லொணா அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று.

இத்துணை இடர்களுக்கும் மத்தியில் அவன் சளைக்காமல் தொடர்ந்து தன் பணியை செவ்வனே புரிகின்றான் என்றால் அதற்கு மூன்றே மூன்று காரணங்கள்தான் உண்டு.

ஒன்று – ஈழத் தமிழ் மக்களும், அவர்கள் தம் வழிகாட்டிகளும் உதயனுக்கு பக்க பலமாகவும், ஆத்ம பலமாகவும், துணையாகவும் நிற்பது.

இரண்டு – உதயனின் வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள் மற்றும் ஊழியர்கள் போன்ற ஆர்வலர்களின் சளைக்காத ஒத்துழைப்பு.

மூன்றாவது – உதயன் வரித்துக்கொண்ட வழியின்பால் நியாயத்தோடு நிலவும் அறமும், அதன்வழி நமக்குத் தோன்றாத் துணை நிற்கும் தமிழ் கடவுளின் அருளும்.

ஆயுத வழிப் போராட்டம் என்ற அக்னிக் கடலில் குளித்து, பரிசுத்தத்தோடு வெளிவந்திருக்கும் நமது சமூகம் இன்று வித்தியாசமான ஒரு சூழ்நிலையை எதிர் கொள்கின்றது.

இந்நிலையில், நீதி நிலைத்திட – நிம்மதி பிறந்திட – உரிமை கிடைத்திட – அறியாமை அகன்றிட – அமைதி நிலவிட – சமூகம் தழைத்திட -- வளம் பெருகிட -- வளர்ச்சி கண்டிட – வழிகாட்ட வேண்டிய பாரிய பொறுப்பு உதயனுக்கு உண்டு.

ஈழத் தமிழர்கள் இன்று வரலாற்றில் ஒரு மிக முக்கியமான காலகட்டத்தில் நிற்கின்றார்கள். தமிழர் தாயகத்தில் அவர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும், எதிர்காலமும் இன்றைய முடிவுகளின் – தீர்மானங்களின் – பிரதிபலிப்புகளில்தான் முற்றாகத் தங்கியுள்ளன என்பது நாமுணர்ந்த விடயம்.

இந்த விவகாரத்தில் தனக்குள்ள வரலாற்றுக் கடமையை – பங்களிப்பை – உதயன் செவ்வனே நிறைவேற்றுவான் என்று தனது பிறந்த நாளிலே தன் மக்களிடம் உறுதி கூற விழைகிறான் உதயன்.

இன்றைய மாவீரர் தினத்துக்காக

# தமிழர் தாயகம் விழாக் கோலம்!

## மாலையில் தலைவர் பிரபாகரன் வருடாந்த உரை

யாழ்ப்பாணம்,நவ.27

விடுதலைப் புலிகளின் மாவீரர்தினம் இன்று தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது. குடாநாட்டில் மாவீரர் நாளை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மூலைமுடுக்கு எங்கும் மாவீரர் தின கலகலப்பை குடாநாட்டில் காண முடிகிறது. இரவெல்லாம் வீதிகளில் ஒளி வெள்ளம். மஞ்சள் - சிவப்பு வர்ணக் கொடிகள், பதாகைகள், அலங்கார வளைவுகள் என்று யாழ்.பிரதேசம் விழாக்கோலம் கொண்டுள்ளது.

மாவீரர் துயிலும் இல்லங்கள் கண கவரும் விதத்தில் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. துயிலும் இல்லங்களுக்கான விசேட போக்குவரத்தில் இன்று ஓட்டோக்களும் பஸ்களும் ஈடுபடவுள்ளன.

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் வைவங்களும் நண்பகல் நடைபெறவுள்ளன.

இன்று மாலை 4 மணிக்கு முல்லைத்தீவில் நடைபெறும் கடற்புலி

(18.ஆம் பக்கம் பார்க்க)

வன்செயல்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும்:

# அமெரிக்காவின் விமர்சனம் தவறு

# கோரிக்கையும் பொருத்தமற்றது

## ஒஸ்லோவில் அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

- ஒஸ்லோவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஒஸ்லோ,நவம்பர்27

**"நாம் வன்முறையில் ஈடுபடும் பயங்கரவாதிகள் என்ற அடிப்படையில் அமெரிக்கா எம்மை விமர்சிப்பது தவறு. வன்முறை, பயங்கரவாதம் என்ற விடயங்களுக்கு அமெரிக்கா என்ன வரைவிலக்கணத்தை கொண்டிருக்கிறது என்பது நமக்குத் தெரியவில்லை.**

**ஆனால், எமது செயற்பாட்டை 'வன்முறை', 'பயங்கரவாதம்' என்ற பெயரில் வியாக்கியானம் செய்வதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. யுத்தச் செயற்பாட்டை இந்த வரைவிலக்கணத்துக்குள் உட்படுத்திக் கோரிக்கை விடுப்பது பொருத்தமற்றது."**

மேற்கண்டவாறு ஒஸ்லோவில் தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.

விடுதலைப் புலிகள் வன்முறையையும் பயங்கரவாதத்தையும் கைவிட்டுவிட்டதாகப் பிரகடனப்படுத்த வேண்டும் இப்படி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் சமாதான ஆதரவுக் கூட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய போது அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் புலிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

அதற்குப் பதில் அளிக்கும் விதமாகவே அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார். (ஜ-3)

*(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)*

### உள்ளே.....

- பதினெட்டாவது ஆண்டில் உதயன் - உதயனைப் பற்றிய மக்கள் கருத்து, மதத் தலைவர்களின் ஆசி.
- மாவீரர் தின ஏற்பாடுகள் பற்றிய செய்திகள், அலங்காரக் காட்சிகளின் படங்கள்.
- வாசகர்கள் வரைந்தனுப்பிய மாவீரர் தினக் கவிதைகளின் தொகுப்பு.

## பல நாடுகளின் பிரதிநிதிகள் ரணிலைச் சந்தித்துப் பேச்சு

ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றிய பல நாடுகளின் பிரதிநிதிகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தனித்தனியாக சந்தித்து பேச்சு நடத்தினர்.

அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிடேஜ், பிரித்தானிய சர்வதேச அலுவல்களுக்கான செயலாளர் க்ளேயர் சொட், கனடா வெளிநாட்டு அலுவல்கள் தொடர்பான பிரதிச் செயலாளர் டேவிட் கில்கர், ஜேர்மனி பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான பிரதிச் செயலாளர் எரிக் ஸ்டேனர், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணை

(18ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.செயலகம் முன்பாக டிசெ.2 முதல் மறியற்போர்

## காணாமற்போனோர் சங்க ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,நவ.27

தமது சங்கம் ஏற்கனவே தீர்மானித்தபடி எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்.செயலகம் முன்பாக மறியற் போராட்டம் நடைபெறும் என்று காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் எஸ்.சற்குணம் தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற சங்கத்தின் விசேட கலந்துரையாடலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஹாட்லி மாணவர்கள் தடுக்கப்பட்டனர்!

கரவெட்டி,நவ.27

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் மாவீரர் தின அலங்காரங்களை அமைக்க முயற்சித்த மாணவர்களை படையினர் தடுத்து விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் தடுக்கப்பட்டதை ஆட்சேபித்து கல்லூரி நுழைவாயிலில் உள்ள சோதனை நிலையத்தின் முன்பாக மாணவர்கள் நேற்று மறியல் செய்ய முயன்றனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு 30 மீற்றர் வெளியிலேயே அலங்கார சோடனைகளைச் செய்யலாம் என்று படையினர் மாணவர்களுக்கு அறிவுறுத்தினர் என்று கூறப்படுகிறது. (ஜ-70-3)

## இத்தாலிக்குள் நுழைந்த 345 பேர் கைது!

கொழும்பு,நவ.27

இத்தாலி நாட்டுக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசிப்பதற்கு முயன்ற இலங்கையர்கள் உட்பட பலர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

லங்கடுவ தீவுக்கு அருகில் நான்கு படகுகளில் பிரயாணம் செய்துகொண்டிருந்த 345 பேரைத் தாம் கைது செய்துள்ளதாக இத்தாலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

டுனிசியாவிலிருந்து இத்தாலிக்கு

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தனக்கே உரித்தான பணியை 'உதயன்' தொடரட்டும்!

கடந்த 17 ஆண்டுகளாக செய்தித்துறையில் தனக்கென ஓர் இடத்தை வைத்திருக்கும் 'உதயன்' பத்திரிகை இன்று இன்னோர் புதிய ஆண்டிற்குள் காலடி எடுத்து வைப்பதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறோம். கடந்து வந்த பாதை வியப்பிற்குரியது. இன்று பத்திரிகைத்துறை அனேக சவால்களை சந்திக்கும் ஓர் துறையாகும். சமூகத்தின், தேசத்தின் உலகின் உண்மை நிலைமைகளை வெளிக்கொணர்வது பத்திரிகை தர்மமாகும். சமூக, பொருளாதார, அரசியல் விழுமியங்களைப் போற்றி பாதுகாக்க வேண்டியது பத்திரிகையின் கடமையாகும்.

இன்று இன, மத, அரசியல் சார்புடைய பத்திரிகைகள் நடுவே தனித்துவமாக பக்க சார்பில்லாது தனிவுடன் செயற்படும் பத்திரிகைகள் ஒரு சிலதே. அவ்வகையில், உதயன் தொடர்ந்தும் தனக்கே உரித்தான பணியில் சமூக சீர்திருத்த மாற்றங்களுக்கு தன்னைத் தொடர்ந்தும் அர்ப்பணித்து செயற்பட வாழ்த்துகிறோம்.

வாழ்க உதயன்! வளர்க அதன் கதிர்கள்!!

வணபிதா. எஸ். பி. நேசகுமார்,
*குருமுதல்வர் இலங்கைத் திருச்சபை.*

## மண்ணிலும் மனங்களிலும் 'தடம்' பதித்தவன் 'உதயன்'!

அன்புமிகு வாசகர்க்கு,

வலைப்பின்னல் யுகத்தில் தொடர்பியல் துறையின் அபரீதமான பங்களிப்பு சமாதானத்தின் கட்டமைப்புக்குத் தேவை. சிறப்பாக எமது நாட்டில் எழுச்சிபெறும் சமாதானத்தின் கீற்றுகள் தரும் நம்பிக்கையின் வித்துகளை மக்கள் மனதில் தூவும் கட்டுப்பாடு பத்திரிகைகளுக்கு உண்டு. மன்னிப்பின் மதிப்பீடுகளில், நீதியான தளத்தில் உருவாகும் சமாதானமே அர்த்தமுள்ள சமாதானமாகும்.

கடந்த 17 ஆண்டுகளாய் எமது மக்களின் மனத்திலும் மண்ணிலும் தடம் பதித்த 'உதயன்' பத்திரிகையின் பணி வியந்து கூறக்கூடிய ஒன்றே. தடைகளைக் கண்டு மனந்தளராமல், தடங்கல்களைக் கண்டு ஓயாமல் பணி தொடர்வது பெரும் சாதனையே. தொடர்பியல் துறையில் தடம்பதித்த 'உதயன்' நாளிதழின் ஆசிரியரையும், எழுத்தாளர்கள், பணியாளர்களையும் மற்றும் வாசகர்கள் தொடர்பாளர்களையும் வாழ்த்தி இறையாசீரை வேண்டுகிறேன்.

*இறைபணியில் உங்கள்....* ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம்
*யாழ். ஆயர்*

# ஆலயங்களில் இன்றுமாலை நினைவொலி; வீடுகளில் மக்கள் விளக்கேற்றி அஞ்சலி!

யாழ்ப்பாணம்,நவ.27

தமிழர் தாயகம் எங்கும் மாவீரர் தினம் இன்று எழுச்சியுடன் கொண்டாடப்படவுள்ளது. குடாநாட்டில் முன்னெப்போதும் இருந்திராத உணர்வெழுச்சியுடன் மக்கள் மாவீரர் நாளுக்கு தயாராகியிருக்கின்றனர்.

துயிலும் இல்லங்களிலும் பொது இடங்களிலும் இன்று நடைபெறவிருக்கும் நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உரையைத் தொடர்ந்து இன்று மாலை 6.35 மணிக்கு (பழைய நேரம் 6.05 மணி) அனைத்து ஆலயங்களிலும் துயிலும் இல்லங்களிலும் மணியோசை (நினைவு ஒலி) எழுப்பப்படும். அதனைத் தொடர்ந்து 6.36 (பழைய நேரம் 6.06 மணி) மணிக்கு அகவணக்கம் இடம்பெறும். இந்த நேரத்தில் சகல மக்களும் தமது அனைத்துப் பணிகளையும் நிறுத்தி எழுந்து நின்று அகவணக்கம் செய்வர். 6.37 (பழைய நேரம் 6.07 மணி) மணிக்கு ஈகச்சுடரேற்றல் இடம்பெறும்.

மாவீரர்களின் பெற்றோரும் உரித்துடையோரும் மாவீரர்களின் நினைவுக் கற்களுக்கும் கல்லறைகளுக்கும் ஈகச சுடரேற்றுவர். இதுவரை நினைவுக் கற்கள், கல்லறைகள் நிறுவப்படாத மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையவர்கள் துயிலும் இல்லங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுச் சுடரை ஏற்றுவார்கள். இந்த நேரத்தில் பொதுமக்களும் தமது இல்லங்கள் மற்றும் வாழ்விடங்களில் சுடரேற்றுவார்கள்.

**பெற்றோர் கௌரவிப்பு**

இவற்றுக்கு முன்னதாக மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு இடம்பெறவுள்ளது. இதற்கென வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம் ஆகிய இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பான விவரங்கள் வருமாறு:-

✪ வலிகாமம்:- தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களில் ஒரு தொகுதியினர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில். அடுத்த தொகுதியினர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில்.

✪ வடமாராட்சி:- அப்பா பாடசாலையில் (தாமோதிரா வித்தியாசாலை)

✪ தென்மராட்சி- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில்.

✪ தீவகம்:- வேலணை, சாட்டி தேவாலயத்துக்கு முன்பாக உள்ள பாடசாலையில்.

கௌரவிப்பு நிகழ்வு சகல இடங்களிலும் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வு நிறைவடைந்ததும் பெற்றோர்களும் உரித்துடையோர்களும் 'பாண்ட்' வாத்திய சகிதம் மாலை 4 மணிக்கு துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப் படவுள்ளனர்.

(ஐ-10-15-180)

## கோப்பாய் துயிலும் இல்லத்தில் இரவிரவாக மக்கள் கூடினர்

யாழ்ப்பாணம்,நவ.27

குடாநாட்டில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று மாலை முதல் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரளத் தொடங்கியுள்ளனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று இரவிரவாக மக்கள் தங்கி இருந்து அஞ்சலி செய்ததைக் காணமுடிந்தது. துயிலும் இல்லப் பிரதேசங்களிலும் அங்கு செல்லும் வீதிகளிலும் 'ரியூப் பல்புகள்' பொருத்தப்பட்டு விசேட ஒளி வசதிகள் செய்யப்பட்டிருப்பதால் மக்கள் இரவு முழுவதும் அங்கு தங்கினர். மேலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இன்று துயிலும் இல்லங்களில் திரள்வர்.

கோப்பாய் துயிலும் இல்லப் பகுதியில் நேற்று முன்னிரவு சனக் கூட்டத்தின் மத்தியில் சிலர் மோட்டார் சைக்கிள்களிலும், ஓட்டோக்களிலும் வேகமாக ஓடித்திரிந்ததால் பொதுமக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டதையும் காணமுடிந்தது.

(ஐ-72-12-9)

## பிறந்தநாள் குதூகலத்தில் மக்கள்

கிளிநொச்சி,நவ.27

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 48 ஆவது பிறந்த தினமான நேற்று தமிழீழம் எங்கும் போராளிகளும் பொதுமக்களும் இனிப்புப்பண்டங்களைப் பரிமாறி குதூகலமாகக் கொண்டாடினர்.

வன்னிப் பெருநிலம் உட்பட தமிழ்ப் பிரதேசங்களில் தலைவரின் பிறந்த நாளை ஒட்டி ஆலயங்களில் விசேட பூசைகளும் நடத்தப்பட்டன. 'புலிகளின் குரல்' வானொலி மூலம் மக்கள் தலைவருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (ஐ-3)

## செம்மணி வழக்கு: விசேட அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு,நவ.27

செம்மணிப் புதைகுழிப் படுகொலைகள் தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை குற்றப்புலனாய்வுப் பொலீஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பித்தனர்.

செம்மணியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் ஹைதராபாத்தில் உள்ள பரிசோதனைக் கூடத்துக்கு மரபணுப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் -

அது தொடர்பான அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை என்றும் -

குற்றப் புலனாய்வுப் பொலீஸார் தமது விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

(ஐ-3-ரி)

## இரு கட்சியினர் மூளாயில் கைகலப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

வலி.மேற்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக்கொண்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் எனக் கூறப்படுவோருக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற்றிருக்கிறது.

பிற்பகல் 4 மணியளவில் மூளாய் பகுதியில் ஈ.பி.டி.பியின் உறுப்பினர்கள் துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்தனர். அச்சமயம் அங்கு வந்த ஐதேகட்சி ஆதரவாளர்கள் சிலருக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் பின்னரே கைகலப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பியினர் மானிப்பாய் பொலீஸில் முறைபாடு செய்துள்ளனர். (ஐ-3)

## மேலதிக அரச அதிபர் நியமனம்

கிளிநொச்சி மேலதிக அரச அதிபராக நா.வேதநாயகன் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய், நல்லூர் பிரதேச செயலராக கடந்த ஐந்து வருடகாலமாக இவர் பணியாற்றி வந்தார். (ஐ-3)

# வன்முறை, பயங்கரவாதம் பற்றிய அமெரிக்க வரைவிலக்கணம் என்ன?

## ஒஸ்லோ செய்தியாளர் மாநாட்டில் பாலசிங்கம் கேள்வி

ஒஸ்லோ,நவ.27

"விடுதலைப் புலிகள் வன்முறையையும் பயங்கரவாதத்தையும் கைவிட்டு விட்டதாக பிரகடனப்படுத்த வேண்டும்."

இப்படி நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமையன்று) ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய சமயம் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் குறிப்பிட்டிருந்தார்.

அவரின் இந்தக் கூற்றுத் தொடர்பாக புலிகளின் பிரதிபலிப்பை புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டிருக்கின்றார். நேற்று முன்தினம் மாலை உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் முடிவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமெரிக்க பிரதி அமைச்சரின் கருத்துக் குறித்து அன்ரன் பாலசிங்கத்திடம் கேட்கப்பட்டது. அப்போது அவர் கூறியதாவது:-

'வன்முறை', 'பயங்கரவாதம்' என்ற பதங்களுக்கு அமெரிக்கா என்ன வரைவிலக்கணத்தை கொண்டிருக்கின்றது என்பது எமக்குத் தெரியவில்லை. ஆனால், எமது செயற்பாட்டை 'வன்முறை', 'பயங்கரவாதம்' என்ற பெயரில் வியாக்கியானப்படுத்துவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. யுத்தச் செயற்பாட்டை இந்த வரைவிலக்கணத்துடன் உட்படுத்துவது பொருத்தமற்றது.

யுத்தநிறுத்தத்தை அறிவித்ததன் மூலம் ஆயுத வன்செயல் நிறுத்தத்தை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

புலிகள் மட்டுமல்லாமல் இலங்கை அரசு உட்பட இரு தரப்புக்களுமே வன்முறைகளை நிறுத்துவதற்கு உறுதியளித்துள்ளார்கள் என்பதை யுத்த நிறுத்த வாசகங்கள் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

ஆயுதப் போராக மாறிய இந்தப் பிணக்கிற்கு அடிவேராக அமைந்த காரணிகளை எனது ஆரம்ப உரையில் தெளிவாக விளக்கியிருந்தேன். அந்த அடிவேர்கள் அகற்றப்பட்டால் ஆயுத வன்முறை தேவையற்றதாகிவிடும் என்பது நிச்சயம்.

எமது மக்களின் அரசியல் கோரிக்கைகள், அரசியல் பேச்சுக்கள் மூலம் நிறைவேற்றப்பட்டால் - அவர்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் விருப்பங்கள் அரசியல் தீர்வு மூலம் நிறைவு செய்யப்படுமானால் - வன்முறைக்கான அவசியமும் இல்லாதொழிக்கப்பட்டுவிடும்.

அரசியல் ரீதியாக இத்தகைய தீர்வைக் காணும் பொறுப்பு இலங்கை அரசுக்கும்கூட உள்ளது.

சமாதானத்தை அடையும் நோக்குடன் ஒரு தீர்வைக் காண்பதற்காக - சமாதானத்தின் பெயரால் - புலிகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அரசுத் தரப்பும் தயாராக உள்ளது.

இருதரப்பும் சமாதான முயற்சிகளின் பால் தமக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி, இதனடிப்படையில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதில்லை என உறுதியளித்துள்ளன.

எனவே, நாம் வித்தியாசமான அடிப்படையில் வேறுவிதமான பின்னணியில் செயற்படுகின்றோம்.

'நாம் வன்முறையில் ஈடுபடும் பயங்கரவாதிகள்' என்ற அடிப்படையில் அமெரிக்கா எம்மை விமர்சிப்பது முற்றிலும் தவறானதாகும்.

இந்த ஆயுதப் போராட்டம் எப்போது தொடங்கியது? எதற்காகத் தொடங்கப்பட்டது? அரச அடக்குமுறைக்கு எதிரான ஆயுத எதிர்ப்பாகவே அது தோன்றி வளர்ந்தது.

இப்போது இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் ஆயுதப் போரின் பின்னடைவை இருதரப்பும் உணர்ந்துள்ளன. அதனடிப்படையில் இரு தரப்பும் ஒரு மேசையில் அமர்ந்து சமாதான வழிகளில் தீர்வைக் காண்பதற்கு முயற்சிப்பது என முடிவு செய்துள்ளன.



இந்த நிலையில் புலிகள் வன்முறைகளைக் கைவிட்டுவிட்டதாக அறிவிக்கக் கோருவது பொருத்தமற்றது - என்றார் அவர்.

தமிழ்ச் செய்தியாளர்களுக்கு கூட்ட முடிவில் பேட்டி வழங்கிய அன்ரன் பாலசிங்கம் அப்போது கூறியதாவது:-

விடுதலைப் புலிகளைப் 'பெரிய பயங்கரவாதிகள்' என்று வர்ணித்து வந்த நாடுகள், இப்போது புலிகளுக்கு உரிய ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கி, புலிகளை சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெறச் செய்யும் இன்றைய நிலைக்கு உயர்த்தியுள்ளன.

சர்வதேச ரீதியிலான இத்தகைய மாநாட்டில் விடுதலைப் புலிகள் தமது பக்கக் கருத்துக்களை தெரிவிப்பதற்காக அவர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கி - ஒரே மேடையில் புலிகள் உட்பட அனைத்துப் பிரமுகர்களையும் அமர்த்தி, புலிகளுக்குரிய ஸ்தானம் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எமது மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு நாமே கொண்டு செல்லும் வாய்ப்பும் இப்போது கிட்டியுள்ளது - என்றார்.

## மைலந்தனை படுகொலை வழக்கு: 18 இராணுவத்தினரும் நீதிமன்றத்தால் விடுவிப்பு!

14 சிறுவர்கள் உட்பட 35 தமிழர்கள் மைலந்தனையில் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 18 இராணுவத்தினரும் நேற்று முன்தினம் 8.30 மணியளவில் மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜாவினால் விடுதலை செய்யப்பட்டனர்.

வழக்கு விசாரணை முடிவில் சிங்கள ஜூரிமார் சார்பாக சுமார் 3 மணி நேரம் கலந்து ஆலோசித்து விட்டு குற்றம் சாட்டப்பட்ட 18 பேரும் குற்றவாளிகள் அல்லர் என்று நீதிபதிக்குத் தமது ஏகமனதான முடிவைத் தெரிவித்தனர்.

அந்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் ஜூரிமாரை மீண்டும் கலந்தாலோசனை செய்து புதிதாக முடிவுக்கு வரும்படி கேட்டுக்கொண்டார்.

ஜூரிமார் சுமார் ஒரு மணி நேரம் கலந்தாலோசனை நடத்திவிட்டு நீதிபதியிடம் திரும்பிவந்து குற்றம் சாட்டப்பட்ட 18 பேரும் குற்றவாளிகள் அல்லர் என்பதே தமது ஏகமனதான முடிவு என்று மீண்டும் தெரிவித்தனர்.

அதையடுத்து 18 பேரையும் நீதிபதி விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

படுகொலை மட்டக்களப்பில் உள்ள மைலந்தனைக் கிராமத்தில் 1992 ஓகஸ்ட் 9ஆம் திகதி நடந்தது.

## கொழும்புத்துறை குடும்பங்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,நவ.27

கொழும்புத்துறை கிழக்குப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 108 குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவிருக்கின்றது.

படையினர் விலகிய பிரதேசங்களில தற்சமயம் மீளக்குடியமர்ந்து வரும் இந்தக் குடும்பங்கள் வீடுகளைத் திருத்தவும் அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்யவும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவிருக்கின்றது. (ஐ-3)

# 18 ஆவது ஆண்டில் 'உதயன்'.....




## மக்களின் நலனே உதயனின் மூச்சு!

பெருமதிப்புக்குரிய வாசகர் பெருமக்களே!

உங்கள் உதயனுக்கு இன்று பதினேழாவது பிறந்த நாள். பதினேழாவது அகவை நிறைவுற்று, புத்துணர்வுடனும் புதுத் தெம்புடனும் புதிய ஆண்டில் காலடி பதிக்கும் அவன், இந்த நன்னாளில் உங்கள் எல்லோரினதும் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் நாடி நிற்கின்றான். தனது வளர்ச்சிக்கும் வளத்துக்கும் வாழ்வுக்கும் வலுவூட்டிய உங்களை அன்புடனும் பண்புடனும் வணங்குகின்றான்.

உயிர்த்துடிப்புள்ள - வீச்சும் வேகமுங்கொண்ட - மக்கள் நலன்களையே மூச்சாகக் கொண்ட - நாளிதழாக உதயன் மிளிர்வதற்கு நீங்கள் அவன்மீது கொண்டுள்ள பற்றும் அதி அபிமானமும் மிகு மதிப்புமே மூலவளங்கள். கடந்து சென்ற கஷ்டமான, இன்னல்கள் நிறைந்த, ஆபத்துக்கள் சூழ்ந்த, நெருக்கடிகள் மலிந்த காலங்களில் உங்கள் மத்தியிலேயே - உங்களுடன் வாழ்ந்தே - உங்கள் வாழ்வுடன் இணைந்தே - பணிபுரிந்தவன் உதயன்.

அக்காலத்தில் அவனை உங்கள் உள்ளக் கமலங்களில் முழுமையாக நிறைத்து வைத்திருந்தவர்கள் நீங்கள். இப்போதும் அவன் மீதான அபிமானத்தையும் ஆதரவையும் மதிப்பையும் கடுகளவேனும் குறைத்திடாமல் தொடர்ந்தும் பேணிப் பெருக்கி வளர்த்து உயர்த்தி வருகின்றீர்கள்.

ஈழத் தமிழ்மக்களின் குரலாகவே உதயன் என்றென்றும் ஒலித்து வருகின்றான். அந்தச் சீரிய, நேரிய பணியே இன்னும் பலப்பல ஆண்டுகளுக்கு அவனது வாழ்வியக்கமாகத் தொடரும். எமது மண்ணினதும் மக்களினதும் வாழ்வும் வளமும் நலனும் நலமும் அவனது நாடி - நரம்புகள். பத்திரிகையானது மக்களின் காவல் நாயகனாக விளங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை, தப்பின்றி நிறைவேற்றுவதையும் மக்களின் கருத்துக்களுக்குக் களம் அமைக்கும் கடமைதனை ஆற்றுவதையும் தளர்விலாது செய்வதென தான் உதித்ததிலிருந்தே திடசங்கற்பம் பூண்டவன் உதயன்.

மக்களுக்கு எதிரான அநீதிகளை இனங்கண்டு, அவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டவும், களைந்தெறியவும் மக்களின் அன்றாட வாழ்வின் சமூக, பொருளாதார, அரசியல் பரப்புகளில் பக்கத்துணை நிற்கவும் உதயன் என்றும் தயக்கம் கொண்டதில்லை. தனக்குள்ள சமூகப் பொறுப்புணர்வோடு பத்திரிகா தர்மத்தை தனது ஆன்ம நேயமாகக் கொண்டு, அதனின்று பிறழாது, உண்மையுடனும் நேர்மையுடனும் மக்கள் பணி செய்வதில் உதயன் முன்னிற்கிறான். இதனை அங்கீகரித்தும் ஊக்குவித்தும் அமோக ஆதரவு தரும் உங்களின் உயிர்த் தோழனாக எந்நேரமும் உடனிருப்பான் அவன்.

எக்காலமும் எப்பொழுதிலும் எச்சூழலிலும் மக்கள் நாளிதழாகவே திகழவேண்டும் - பணி செய்யவேண்டும் - என்ற இலட்சியத்துடனும் இலக்குடனும் உதயன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டுள்ளான் - உணர்வுபூர்வமாக உய்த்துள்ளான். இந்த நோக்கத்துக்காகவே அவன் தன்னை அர்ப்பணித்து சலியாது உழைத்து வருவதை நீங்கள் நன்கறிவீர்கள்.

கடந்த இரண்டு தசாப்தங்களாகத் தமிழர்களின் தாயக மண்மீது கவிந்திருந்த இருள் இன்று நூலிழை அளவு நீங்கியுள்ளது. இந்த மாற்றத்தைப் பயன்படுத்தி, மேலும் கனதியான, செறிவான, மெருகுசேர் உதயனை, உங்கள் கரங்களில் தவழவிட முனைவோம். மிகப் பிந்திய சிறப்புச் செய்திகளை உடனுக்குடன் தந்து முந்திக்கொள்ளும் தனித்திறனை - வினைத்திறனை - மேன்மேலும் வளர்த்துக் கொண்டுள்ளோம். நாளின் முதன்மை நாயகனாக - நாளிதழாக - இருந்து உலக, உள்நாட்டு, உள்ளூர்ச் செய்திகளை, சுடச்சுட உங்களுக்கு வழங்கும் பணியை மேன்மேலும் வளர்த்துக்கொள்வோம். இவற்றைச் செயலாக்குவதற்கு உந்து சக்தியாகவும் ஊட்டச்சத்தாகவும் விளங்க வல்லவர்களில் முதன்மையானோர் நீங்களே.

வாசகர்களே, விளம்பரதாரர்களே!

### சுவிஸிலிருந்து ஒரு மடல்...

உதயனின் இன்றைய வளர்ச்சிக்கும் வலிமைக்கும் வளத்துக்கும் உறுதிகுன்றா உழைப்புக்கும் நீங்களே பலமும் பக்கத்துணையுமாவீர்கள். அவனது உயர்வுக்கும் உன்னத பணிக்கும் சிறப்புக்கும் பெருமைககும் பல சாதனைகளுக்கும் நீங்களே விளைநிலம். அதன்பால், உதயன் சார்பிலான எமது இதயங்கனிந்த பெரு நன்றிகள் உங்களுக்கே.

உங்களிடமிருந்து தற்காலிகமாகத் தொலைதூரத்தில் வாழ்ந்தாலும், எனது ஆத்மாவும், உள்ளமும் உதயனின் வாசகர்களாகிய உங்களையே நாளும்பொழுதும் வலம்வந்து கொண்டிருக்கின்றன. உதயனின் ஆற்றலும், சக்தியும் பல்கிப் பெருக, வாசக நேயர்களின் நேசம் நிறைந்த நல்லாசிகளும் நல்லாதரவும் என்றும் பொங்கிப் பொலிந்து பெருகுவதாக!

எனது அன்னை மண் எங்ஙனும் வாழும் மக்களுக்கும் உதயனுக்கும் தமிழ்த் தெய்வம் முருகப் பெருமானின் பேரருளும் பெருங்கருணையும் குறைவின்றிக் கிடைக்க அவனது பாத கமலங்களை ஏற்றிப் போற்றி இறைஞ்சுகின்றேன்.

வணக்கம்.

**ம.வ.கானமயில்நாதன்**

*நிறுவக ஆசிரியரும், பிரதம ஆசிரியரும்.*


## வாசகனின் இதயத்திலிருந்து...

உதயத்து வேளையிலே 'உதயனை'ப் படித்திட்டால்
உலகையே வலம்வந்த உணர்வலைகள் உருவாகும்
இதயத்து எண்ணத்தை இறுக்கமாய் எடுத்துரைக்கும்
நடுநிலைமை ஊடகமே நீடூழி நீ வாழி
புதையலாம் விஞ்ஞான விந்தையொடு விரிவான கட்டுரையால்
'அடே அப்படியா' என வியக்க வைக்கும் நாளிதழே!
மேதைகளாய் உயர்ந்தோர் உன்னால் பல்லாயிரமே
மேதினியில் மேன்மையுடன் மங்காது நீவாழ்க!

திக்கெட்டும் திகழ்கின்ற பல்வேறு செய்திகளை
அச்சொட்டாய் விரைந்து முதல் தருவதே உன் சிறப்பு
சிறுவிதையாக எண்பத்தைந்தில் உன் பிறப்பு
ஆண்டு பதினெட்டிலோ பெருவிருட்சமாய் பரிணமிப்பு
பெரும் அறிஞர்கள், தலைவர்கள், கலைஞர்கள் உதயனைத்
தரிசித்து செல்வதே உன் பெருமைக்கு முத்தாய்ப்பு
நூறல்ல பலநூறு ஆண்டுகள் பத்திரிகைப் பணியாற்ற
தினம் உன்னை விழிநோக்கும் வாசகரின் வாழ்த்துக்கள்.

எஸ்.யேசுதாஸ்

## இணையத்தில் உங்கள் உதயன்...




## மக்கள் கரங்களில் தினம் உதிக்கின்றான் 'உதயன்'

'உதயன்' பத்திரிகையின் சேவை இன்று பதினேழு ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இதனை முன்னிட்டு மக்கள் அனைவரும் பெருமிதம் அடைகின்றனர். போர்க்கால சூழலிலும் தனது சேவையை தவறாமல் ஆற்றியவன் உதயன். தினமும் மக்களின் கரங்களில் வந்து உதிப்பதை நாம் மறக்கமுடியாது. ஒவ்வொருவரும் காலையில் உதயனையே எதிர்பார்த்து வேண்டி நிற்பதையும் அவதானிக்கமுடிகிறது. அத்தனை சிறப்பும் மதிப்பும் பெற்ற 'உதயன்' உண்மையான செய்திகளை வெளிக்கொண்டுவருவதே தனது கடமை என வரித்துள்ளான். உள்ளதை உள்ளபடி தெரிவிக்கும் பத்திரிகையில் 'உதயன்' மேலான பங்களிப்பை ஆற்றியுள்ளான். சமய சம்பந்தமான விடயங்களையும் மக்களுக்கு எடுத்து இயம்புகின்றான். இவற்றிற்கு எல்லாம் அங்கு தொழில்புரியும், ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் உந்து சக்தியாக விளங்குவதே காரணம். இப்பத்திரிகை மேலும் விரிவடைந்து சேவை செய்யவேண்டும். 'உதயன்' நிறுவன ஊழியர்கள் நல்லன எல்லாம் பெற்று நீடூழிவாழ்ந்து உதயனின் சேவைக்கு உழைக்க எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லாமல்
பொன்றாது நிற்பதொன்று இல"
சர்வே ஜனாஹா சுகினோ பவந்து.

**சிவஸ்ரீ.ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார்**

*சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி. (இலங்கை)*

## மகத்தான சேவை

தற்காலத்தில் முன்னணி வகிக்கும் துறைகளில் பத்திரிகைத்துறை மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. அந்த வகையில் எமது மண்ணில் 17 வருடங்களாகப் பணியாற்றிவரும் உதயனின் சேவை மகத்தானது; பாராட்டுக்குரியது.

நாட்டில் போரனர்த்தங்கள் நிறைந்து உண்மை மறைக்கப்பட்ட வேளையிலும், எமது மக்களின் உண்மை நிலையை உலகிற்கு உரைத்துக் கொண்டிருந்த பெருமை உதயனையே சாரும். இன்றும் சிறந்த நாளிதழாக தன்னுள் பல்வேறு அம்சங்களைத் தாங்கிவரும் உதயன் பத்திரிகை தொடர்ந்தும் நடுநிலைமை தவறாது, பக்கச்சார்பின்றிக் காலந்தாழ்த்தாமல் செய்தி வழங்கி தன்னிகரில்லாப் பணியால் சிறந்ததொரு தகவல் தரும் ஊடகமாக எம்மக்கள் மத்தியில் என்றென்றும் மிளிரவேண்டுமென இறையாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்திரு.கே.கருணாசேகர**

*இலங்கை மெதடிஸ்த திருச்சபை, யாழ்.மாவட்டம்.*

## உதயன் நீடு வாழ்க!

செய்திகள் பலவும் செப்பமாய்த் தந்து
உள்ளம் கவர்ந்த உன்னத இதழாய்
பதினேழாமாண்டுப் பூர்த்தியைக் கண்ட
உதயா! வாழ்க! நற்பணி தொடர்க!

சமூகஜோதி கா.கணேசதாசன்.

## ஆயிர மாண்டு உன் பணிகள் வாழிவாழி!

அகிலமெல்லாம் புகழ்படைத்த உதயனே நீ
ஆண்டுபதி னேழாகித் தமிழ்சிறக்க
சகலகலை யும்சிறக்க, சரித்திரங்கள்
சமயநெறித் தத்துவங்கள், உலகமெங்கும்
புகழ்படைத்த புராதனமாய் ஆக்கங்கள், நற்
புலவர்தரு காவியங்கள் ஓவியங்கள்
அகமலர நம்மவர்க்குத் தந்தாய், இன்னும்
ஆயிரமாண் டுன்பணிகள் வாழி வாழி!

உடனுடனே உலகத்தின் செய்தியெல்லாம்
உள்ளத்தில் பதிபுமுறை மக்களுக்குத்
திடமளிக்கும் சூரியனாய் நிதமும் தந்தாய்
சீர்படைத்த உதயனே, உனைத் தொடர்ந்த
சுடரொளியும் பூதலத்துக் கற்பகம்போல்
சொற்பொருள் மெய்ஞ்ஞானநெறி சுவைக்கத்தந்து
கடவுளரின் சமயங்கள் கலைகள் உய்யக்
கனககிரி விளக்காக வாழி வாழி!

அருட்கவி.சீ.விநாசித்தம்பி M.A.

## யா/இனுவில் இந்துக் கல்லூரி

இனுவில்

## கல்லூரி பரிசளிப்பு விழா 2002

*இடம்:* ***கல்லூரி பிரதான மண்டபம்***

*காலம்:* நாளை (2002.11.28) வியாழன் காலை 9.00 மணி

*தலைவர்:* **செ.குபேரநாதன்** (அதிபர்)

*பிரதம விருந்தினர்:* கலாநிதி **தி.கமலநாதன்** அவர்கள்
(பீடாதிபதி, யாழ்.கல்வியியற் கல்லூரி, கோப்பாய்)

*ஆசியுரை:* மகாவித்துவான் பிரம்மஸ்ரீ **ந.வீரமணி ஐயா** அவர்கள்.

*சிறப்பு விருந்தினர்:* **திரு.அ.தற்பரானந்தன்** அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கல்விக் கோட்டம்)

*கல்லூரி நிறுவுநர் நினைவுப் பேருரை:*
கலாநிதி **S.சிவலிங்கராஜா** அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

*கௌரவ விருந்தினர்கள்:*
**திருமதி சரஸ்வதி ஆறுமுகம்** அவர்கள்
(பழைய மாணவி, ஓய்வுபெற்ற ஆசிரியை,
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)
**திரு.து.சிவராசா** அவர்கள்
(பழைய மாணவர், தொழிலதிபர், இனுவில்)

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
இனுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்.
யா/இனுவில் இந்துக் கல்லூரி.

(11086)



## P.S.A. குயிக்ஸ்ரார் ரெயிலர்
## பாஸ்ட் கொமினிகேசன்
## பாஸ்ட் கொமினிகேசன் இன்

தனது ஏழாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இந்நாளில் எம் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இத்துடன் 27.11.2002 காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை (S.T.D.) ஒரு நிமிடம் இலவசம்.

உள்வரும் அழைப்பும் இலவசமாக வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**பாஸ்ட் கொமினிகேஷன் ஸ்தாபனத்தினர்,**
*இல.392, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*
தொ.பே.இல.: 021-2222591, 0777110029
பக்ஸ்: 021-2222591

(11079)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகசபை மகேஸ்வரி (மகேஸ்)

ஆவரங்கால் மேற்கு, வங்கி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகசபை மகேஸ்வரி அவர்கள் 25.11.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி - அன்னம்மாவின் அன்பு மருமகளும் கனகசபை அவர்களின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி (கனடா), தயாபரன் (கனடா), உதயானந்தன் (கனடா), மோகனதாஸ், டாழினி, சிவரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இன்பநாதன் (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும் சுதர்சன், துஸ்யந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நடராசா, சின்னராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்கி ஒழுங்கை,*
*ஆவரங்கால் மேற்கு.*

தகவல்:
**க.கனகசபை**
(கணவர்)

(சி-25087)

## கந்தையா மனோகரன்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மனோகரன் 20.11.2002 புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2002) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகலிங்கம் வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
**க.ஸ்ரீதரன்**
(சகோதரன்)

(சி-25085)

## சின்னட்டி சுந்தரம்பிள்ளை

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்செழுவில் வசித்தவருமான சின்னட்டி சுந்தரம்பிள்ளை நேற்று(26.11.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் புவனேந்திரன், இராஜகோபால், இராசேந்திரம், தெய்வேந்திரம், தங்கராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி, மல்லிகாதேவி, விக்கினேஸ்வரி, தவமணி, பிரமிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரபாலினி, தயாளினி (லண்டன்), தாரணி, ராகுலன், யசோதரன், சகிலா (கனடா), மிதுலா, பிரமிலா, பவித்திரா, சோபிகா, தர்சிகா, மதுஷன், திவாகர், மயூரன், சயந்தன், கயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் அபினாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2002) புதன்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் அச்செழு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*அச்செழு,*
*நீர்வேலி.*

நிரந்தர முகவரி:
*புன்னாலைக் கட்டுவன் வடக்கு.*

தகவல்:
சு.இராசேந்திரம்
(மகன்)

(சி-11087)

## 'பரஞ்சோதி' நூல் வெளியீடு

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 'பரஞ்சோதி' நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ்.சண்முககுமார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா பிரதமவிருந்தினராகவும், நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் ஆசியுரைகளை நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், முன்னாள் அதிபர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை ஆகியோரும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை தலைவர் சபா.ஜெயராஜாவும், நூலின் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பியும் நிகழ்த்துவர். (ஒ-5)

## எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்குகள்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் எய்ட்ஸ் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்களின் ஏற்பாட்டில் இக் கருத்தரங்குகளை நடத்தி வருவதாக பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பராசசேகரம் தெரிவித்தார். (ஒ-117)

## கவிதைத்தொகுப்பு வெளியீடு

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் மன்ற கலை இலக்கிய வட்டத்தினர் கவிஞர் நாவற்குழியூர் இலட்சுமணன் எழுதிய 'உதயதாரகை' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா வினை எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

கவிஞர் கே.ரஜீபன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-117)

## அறநெறி ஆசிரியருக்கு கருத்தரங்கு

தென்மராட்சி,நவ.27

தென்மராட்சி பிரதேச இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 30ஆம் திகதியும் டிசெம்பர் முதலாம் திகதியும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும்.

தென்மராட்சி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் கருத்தரங்குக்கு தலைமை வகிப்பார் என அறிவிக்கப்பட்டது. (ஒ-117)

## மாவீரர் நினைவாக மரக்கன்றுகள் நட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,நவ.27

மாவீரர் நாளான இன்றைய தினம சகல துயிலும் இல்லங்களிலும் வைத்து மாவீரர்களின் நினைவாக அவர்களின் பெற்றோர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இவற்றை அவர்கள் தமது வீடுகளுக்கு எடுத்துச் சென்று மாவீரர்களின் நினைவாக நட்டு வளர்க்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

## மைதானத்தில் வெள்ளம்

அரியாலை,நவ.27

கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் கொழும்புத்துறை மேற்கு இந்து மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்பட்டது.

இந்த மைதானத்திற்கு அருகில் உள்ள இலந்தைக்குளம் ஊடாகச் செல்லும் வெள்ள வாய்க்கால் துப்புரவு செய்யப்படாததினாலேயே மைதானத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## பற்றைக்குள் ஒதுங்கியவர் படுகாயம்!

இயற்கைக் கடன் கழிப்பதற்காக பற்றை மறைவுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் அங்கு வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் காயமடைந்தார். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரணி குடமியனில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு அருட்செல்வம் (வயது 27) என்பவரே காயமடைந்தவராவார். (ஒ-117)




விநா... ...யார்களே!

பிள்ளையார் ... முன்னிட்டு
திருமலை ஆலடி ... ஸ்தானத்தால் நவாலியூர் சாமி வி... நாதக் குருக்கள் அவர்களின் நல்லாசியுடன்
திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களால் பாடப்பெற்ற
பிள்ளையார் கதை ஒலிப்பேழையும் கதை வசனமும்
"அருகிருந்து கேட்டோர்க்கும் வாராது கேடு"
என்ற வாக்குக்கிணங்க ஒவ்வொரு விரதகாரரும் கேட்டுப் பயன் பெறக்கூடியதாக வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் பிரதிகள் பெற்றுக்கொள்ள
**பிரம்மஸ்ரீ பால.முரளீதரக் குருக்கள்,**
இல.15, B.A. தம்பி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(11089)






முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 3412:1996
License No : KM41240

Access Graphics

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

... கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## தச்சு வேலை செய்வோரின் நண்பன்



*பலநோக்கு மரவேலை இயந்திரம்*

S.T.C. இன்
"பெரிய கொள்வனவுத் திட்டம்"
கீழும் கிடைக்கப் பெறுகின்றது

- ★ சுய வேலைவாய்ப்புக்கு சிறந்தது.
- ★ ஆறு (6) மாத உத்தரவாதம்.
- ★ விற்பனைக்குப் பின்சேவை


வாங்கத்தக்க விலைகளில் தரமான பொருள்கள்

Swashakthi Medura
**STC General Trading Co., Ltd**
(A Fully Govt. owned Institution)
Successors to Sri Lanka State Trading (General) Corporation.
100 A, Park Street, Colombo 02. Tel:326582, 300916
E-mail: lankagen@sltnet.lk Web : www.stcgeneral.com

An enterprise under the Ministry of Commerce & Consumer Affairs
Web : www.commerce.gov.lk


## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 22 - 03 - 1923



விண்ணில் 27 - 11 - 1990

## அமரர் பொன் ஐயம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், வலந்தலை, காரைநகர்)
என்றும் மாறா நினைவுடன்


*கலைமகள் வீதி,*
*அரியாலை.*

\- குடும்பத்தினர்.

*குறிப்பு:*
ஞாபகார்த்த ஆராதனை தென்இந்திய திருச்சபை காரைநகர் தேவாலயத்தில் இன்று (27.11.2002) புதன் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

(C/25092)

# உதயனைப் பற்றி சில வார்த்தைகள்...


சு. இன்பகாந்தன்
புத்தகசாலை உரிமையாளர்

காலையில் உதயனைப் பார்த்த பின்னர்தான் எங்கள் நாளாந்த வேலைகளை ஆரம்பிப்போம்.

'உதயன்' உடனுக்குடன் செய்திகளைத் தருகின்றது. ஒவ்வொரு நாளும் 'உதயன்' பத்திரிகை வாங்குவோம். படித்த பிறகுதான் எனது கடைக்கே வருவேன்.

உதயனை எடுத்தவுடன் முதலில் அதில் சுடச்சுடவரும் செய்திகளையே நான் விரும்பிப் படிப்பேன். மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பிய பின்னர் ஆறுதலாக இருந்து விளம்பரங்கள், கட்டுரைகள் என்று அதிலுள்ள ஏனைய விடயங்களைப் பார்ப்பேன்.

## விடிந்தால் 'உதயன்'தான் அதன்பிறகே மற்றதெல்லாம்!

உதயனில் செய்திகளோடு போட்டிபோட்டுக்கொண்டு விளம்பரங்களும் வருவதால் மக்களுக்கு மிகவும் பயனுள்ள விதத்தில் அமைகிறது.

இன்னும் பல நல்ல அம்சங்களையும் நீங்கள் உங்கள் பத்திரிகையில் சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும்.

## 'உதயன்' வராவிட்டிருந்தால் இருளே சூழ்ந்திருக்கும்!

யாழ்ப்பாண மக்களின் உணர்வுகளை - கருத்துக்களை - வெளிப்படுத்துவது 'உதயன்' பத்திரிகைதான். உதயனூடாகத்தான் யாழ். மக்களின் கருத்துக்கள் வெளியுலகுக்குக் கொண்டு செல்லப்பட்டன என்பது மறுக்கமுடியாத உண்மை.

மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதிலும் அரசியல் முரண்பாடுகள் மற்றும் மக்களின் பெரும் பான்மைக் கருத்துக்களைப் பிரதிபலிப்பதிலும் 'உதயன்' முக்கிய பங்காற்றியுள்ளான்.


வே. கருணாகரன்
ஆசிரியர்

காலையில் செய்திகளைப் பார்க்கவேண்டுமெனில் உதயனைத்தான் பார்க்கின்றோம். நீண்ட காலமாகவே அதுதான் நிலை. சம்பவங்கள் பற்றி உடனுக்குடன் தெரிந்துகொள்ளவேண்டுமெனில் நாம் உதயனைத்தான் பார்த்து வந்திருக்கின்றோம்.

சில காலகட்டங்களில் 'உதயன்' இல்லை என்றால் நாம் இருட்டுக்குள் வசிக்கும் நிலையில்தான் இருந்திருப்போம்.

காலையில், உதயனைப் பார்த்த பின்னர்தான் வேலைக்கோ, வேறு எங்கோ செல்கின்றோம் என்ற நிலை. அன்றைய நாள் நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கு முன்னர் உதயனைப் பார்த்துவிட்டால் பிரச்சினை இல்லை என்ற திருப்தி எங்களுக்கு இருக்கின்றது.

இன்றைக்கு குடாநாட்டில் இருந்து நான்கு பத்திரிகைகள் வெளிவந்தாலும் கூட உதயனின் தரம்தான் உயர்வாக இருக்கின்றது. யாழ்ப்பாணச் செய்திகளைக் கூடுதலாகப் பிரசுரிப்பதும் 'உதயன்'தான். ஆனால், சிறப்பிதழ்கள் வெளியாகும் சமயங்களில் அவற்றில் கூடுதலான விளம்பரங்கள் மட்டுமே இருக்கின்றன. அவற்றில் அரைவாசியாவது கட்டுரைகள், செய்திகள் இருந்தால் அவை பயனுள்ளதாக இருக்கும். விளம்பரதாரர்களுக்கும் வாசகர்களுக்கும் நன்றாக இருக்கும்.

முன்னர் வெளிவந்த உதயனின் வாரப் பத்திரிகையான 'சஞ்சீவி' தொடர்ந்து வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

தற்போதைய நிலையில் மாணவர்களுக்கான பங்களிப்பில் ஏனைய பத்திரிகைகளுடன் ஒப்பிடும்போது உதயனின் பங்களிப்புக் குறைவாகவே உள்ளது. வாசகர் மத்தியில் இப்பொழுது ஏற்பட்டுள்ள போட்டி நிலையில் 'உதயன்' அதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

சிங்களப் பத்திரிகைகளில் வரும் மாற்றுக் கருத்துக்கள் உதயனில் பிரசுரிக்கப்படுவதையும் வரவேற்கின்றோம். தொழில் வாய்ப் பகுதியும் நன்றாக இருக்கின்றது. ஆனால், நாட்டின் பொருளாதாரம் தொடர்பான செய்திகளைக் காணமுடியாமல் உள்ளது. அது ஒரு குறையே.

பத்திரிகைத் துறையில்
நெருக்கடியான 17 ஆண்டுகளைக் கடந்து
வந்துள்ள உதயனைப் பற்றி
மக்கள் என்ன பேசுகிறார்கள்?
இதை அறிய ஆசிரியபீடப் பிரதிநிதி ஒருவர் யாழ்.நகரப் பகுதிக்குச் சென்று சிலரிடம் பேச்சுக் கொடுத்தார்.
அப்போது அவர்கள் கூறியவை இங்கு அப்படியே - அழுத்தம் - திருத்தம் - இன்றி
பிரசுரமாகின்றன.

## எவர் முதலில் உதயனைப் படிப்பது? எங்கள் வீட்டில் என்றும் சண்டை!

காலையில் எங்கள் வீடு ஒரு சண்டைக் களமாகும். வேறொன்றுமல்ல. 'உதயன்' பத்திரிகையை முதலில் படிப்பதற்குத்தான் இந்தச் சண்டை நடக்கும். அந்தளவுக்கு உதயனில் அபிமானமுள்ளவர்கள் நாங்கள். மற்றெந்தப் பத்திரிகையையும் நாம் வாங்குவதில்லை. ஆனால், நீண்ட காலமாக நீங்கள் ஒரு தவறு விடுகிறீர்கள். மரண அறிவித்தல்களையும் வாழ்த்து விளம்பரங்களையும் ஒரே பக்கத்தில் பிரசுரிக்கிறீர்கள். அது அவ்வளவு நன்றாக இல்லை. அதுதவிர உதயனில் அனைத்து அம்சங்களும் சிறப்பாகவே உள்ளன.

'உதயன்' எந்தக் காலத்திலும் தரக்குறைவான சினிமாச் செய்திகளைப் போட்டதில்லை. இது மிகவும் நல்லதொரு விடயம். இதனை நீங்கள் தொடர்ந்து கொண்டிட இருக்கவேண்டும். மற்றப்படி 'உதயன்' மூலம் அரசியல் மற்றும் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகிறது.


திருமதி குகராஜன்
குடும்பத் தலைவி

பொதுமக்களுக்கு உதவும் வகையிலான செயற்பாடுகளில் 'உதயன்' இன்னும் அதிகம் பங்காற்ற வேண்டும். ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுவதிலும், வறியவர்களுக்கு உதவுவதிலும் 'உதயன்' அதிகளவு பங்காற்ற வேண்டியது அவசியம் என்று நான் நினைக்கின்றேன்.

சமுதாய நலன் கருதி 'உதயன்' இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும். மாணவர்களுக்கான பொது அறிவுக்குரிய விடயங்களையும் அதிகம் சேர்த்துக்கொண்டால் அது இன்னும் நிறைவாக இருக்கும்.

## விளம்பர ஆக்கிரமிப்பு போதும் உலகச் செய்திகளை தாருங்கள்!

"நான் இன்று நேற்றல்ல கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு மேலாக 'உதயனி'ன் வாசகனாக இருக்கின்றேன். 'உதயனில்' அனைத்து விடயங்களும் சிறப்பாக உள்ளன. உலகப் புதினங்களை நீங்கள் இன்னும் அதிகமாக்க வேண்டும். தற்போது உலகப் புதினங்கள் வருகின்றன என்றாலும் அவை போதாது.


பத்திரிகையில் விளம்பரங்கள் கூடுதலாக இருக்கின்றது. பத்திரிகையை வாங்கினால் சில சமயங்களில் அதில் புதினங்களைவிட விளம்பரங்களே கூடிய இடம் பிடிக்கின்றன. விளம்பரங்களும் பத்திரிகைக்கு அவசியம்தான். ஆனால், அவற்றை அளவோடு கட்டுப்படுத்தி புதினங்களையும் உலகச் செய்திகளையும் அதிகம் பிரசுரிக்க வேண்டும்.


ஏ. செல்வநாயகம்
ஓய்வூதியர்

உதயன் இப்போது செல்லும் பாதை சிறந்தது. பக்கச் சார்பில்லாமல் பொதுவான செய்திகளை உதயன் தருவது நல்ல விடயம். அது தொடரவேண்டும். அப்போதுதான் எல்லோரும் உதயனை விரும்பிப் படிக்கமுடியும்.

நீங்கள் உள்ளூர் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் வகையிலான செய்திகளுக்கும் முதலிடம் கொடுக்கவேண்டும். தற்போது யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத்துறை மிக மோசமாகப் பின்தங்கியுள்ளது. அதனை வளர்த்தெடுக்க பத்திரிகை பங்காற்றவேண்டும். ஏனெனில் மக்களிடம் ஒற்றுமையை வளர்த்தெடுப்பதில் விளையாட்டு முக்கிய பங்காற்றமுடியும்.

## ஈரவிழிகளில் கரைந்த முதலாவது ஆண்டு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 - 09 - 1947 | 07 - 12 - 2001 |

## அமரர் வல்லிபுரம் சிவராசா

இல்லறத்தில் இனிது வாழ்ந்து
இன்பச் செல்வங்களாய் பிள்ளைகளை வளர்த்து
இனிதே யவர்கள் வாழ வழிகாட்டி
இன்முகத்தோடு சீராட்டிப் பாராட்டி
ஈற்றில் நோயில் வீழ்ந்து - அப்பா
நீர் மறைந்து ஆண்டு ஒன்றுதான் ஆனதுவோ?
எங்கள் ஈரவிழிகள் காய்ந்திடமுன் - மறுபடியும்
இங்கு வந்து பிறந்திடுங்கள் எங்களப்பா!

- குடும்பத்தினர்.

*'நக்கீரன் வீதி',*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*
(11037)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு நிதியுதவி

வலி.மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் வன்னிப் பிரதேசததிலிருந்து தரைவழிப்பாதை திறக்கபபட்ட பின்னர் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியேறியுள்ள 61குடும்பங்களுக்கு நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 66 குடும்பங்களுக்கு தலா 15ஆயிரம் ரூபாவும் ஒரு குடும்பத்திற்கு 10ஆயிரம ரூபாவும் அவர்கள் தங்கள் விண்ணப்பத்தில் தெரிவித்திருந்த வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பிரதேச செயலர் பணிமனைக்கு கிடைத்த 10லட்சம் ரூபா நிதியைக் கொண்டு இக்கொடுபனவு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை,அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் இப் பிரதேச செயலகப் பிரிவில் வன்னியிலிருந்து மீளக் குடியேறியுள்ள வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள வீடற்ற 50 குடும்பங்களுக்கு குடிசைகளை அமைப்பதற்கான கட்டட பொருள்களை வழங்கவுள்ளது.

## தேவை

தொலைபேசி இணைப்பு (கேபிள்) உடன் தேவை.
தொடர்பு:
**T.விமல்**
இல.6, ஸ்ரான்லிக் கல்லூரி
ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
T.P.No. 0777-183474
(11066)

## சேவைநலன் பாராட்டும் பிறந்ததின வாழ்த்தும்

25ஆண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்வதுடன் தனது 50ஆவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடும்

**திருமதி J.F.J.ரூபசிங்கம்** அவர்களை

*(யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி)*

எல்லா நலமும் பெற்று மேன்மேலும் நற்சேவையாற்ற வேண்டுமென்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்.மாவட்ட வலை பந்தாட்ட அணியினர் 2002

(11034)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 - 04 - 1930 | 27 - 10 - 2002 |

## பிலிப்பையா விக்ரர் இம்மனுவேல்

"உங்களுக்காக நாங்கள் வேண்டும்
பொழுதெல்லாம் நம் ஆண்டவர்
இயேசுகிறிஸ்துவின் தந்தையாம்
கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம்"

2002ஆம் ஆண்டில் இழந்துவிட்ட எமது தந்தையாரின் இறுதிப் பயணத்தில் இணைந்து இதயத்தின் அனுதாபங்களை அன்புடன் தெரிவித்த வெளிமாவட்ட உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மற்றும் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து தாராள உள்ளத்தோடு உடனொத்து உழைத்த உறவினர்களுக்கும், அயலவர்களுக்கும் ஏனைய சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் எம் இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.

அத்துடன் தொடர்ந்தும் தொலைபேசிகள், தந்திகள், கடிதங்கள் மூலம் உள்நாடு - வெளிநாடுகளில் இருந்து அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*இவரின் விண்ணக பரிசுக்காக இறைவனுக்கு நன்றி கூறும்:*

மனைவி, சகோதரன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*கன்பொல்லை வீதி,*
*கரவெட்டி வடக்கு.*
(11042)


## முக்கிய அறிவித்தல்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு CFL பல்புகளும் உண்மையில் 80% மின்சாரச் செலவைச் சேமிக்கின்றனவா!!! CFL வாங்கும்போது கவனத்திலெடுக்கப்பட வேண்டியவை.

1. இலங்கை மின்சார சபை (CEB) இலகு தவணைத் திட்டத்தில் அங்கீகாரம் பெற்றவையா?
2. நீங்கள் வாங்கும் ஒவ்வொரு CFL பல்பும் ஆகக் குறைந்தது ஒருவருட உத்தரவாதம் உடையவையா? அத்துடன் உத்தரவாத அட்டை அளிக்கப்படுகின்றதா?
3. நீங்கள் வாங்கும் CFL வகை சர்வதேச தரச் சான்றிதழ்கள் பெற்றவையா?
4. நியாயமான விலையில் கிடைக்கின்றனவா?

இவற்றிற்கு திருப்திகரமான விடைகளை அளிக்காத எந்த CFL பல்பும் உங்கள் மின்சாரத்தை வீணடிப்பது மட்டுமன்றி உங்கள் பணத்தையும் விரயமாக்குகின்றது.

இதனை வழங்கியோர்:

PRESIDENT®
இலங்கைப் பிரதிநிதிகள்

President CFL பல்புகள், CEB இலகு தவணை திட்ட அங்கீகாரம் பெற்றவை.



26-11-2002 இதழில்

# சுடர் ஒளி

- இராணுவ வெற்றிகளுக்கு மட்டும் அல்ல அரசியல் வெற்றிக்கும் உரமிட்டவர்கள்.
- தமிழ்மக்களின் உணர்வு பூர்வ எழுச்சி நாள் மாவீரர் நாள்.
- புலிகளின் கடற்பயணம் ஏற்படுத்திய சர்ச்சை.
- ஒஸ்லோவில் புலிகளுக்குக் கிடைத்த அங்கீகாரம்.
- அம்பாறை மக்கள் முன்னிலையில் 10 ஆவது படையணி அணிவகுப்பு.
- சிறைறு வெட்ட பூதம் கிளம்பிய கதையான ஈ.பி.டி.பியினரின் நெடுந்தீவுப் பிரவேசம்.
- இருட்டு இருட்டு என்று புலம்புவதை விட ஒரு மெழுகுவர்த்தி ஏற்றுவது மேல். - *தேரடி அரட்டை*
- *கொலையுண்ட விளையாது - க்ரைம் டயறி*
- புது நம்பிக்கை தரும் ஒஸ்லோ மாநாடு. - *ஆசிரியர் தலையங்கம்*




(சி-25030)

விலை - 14/-

மற்றும் மசாலமிக்ஸ், பித்தன் பதில்கள், மலையக கண்ணோட்டம், அலைகளின் காவியம், கவிதைப்புனல், சிறுகதை, குறுங்கதை, பெண், கலையமுதம், இளஞ்சுடர், விளையாட்டு, மதன் தொடர் என பல்வேறு அம்சங்களுடன்.....

இடை-நிறுத்தப்பட்டுள்ள

# சாவகச்சேரி சந்தை வேலைகளை விரைவில் பூர்த்திசெய்து தருக!

## நகரசபைத் தலைவர் அரச அதிபருக்குக் கடிதம்

தென்மராட்சி,நவ.27

சாவகச்சேரியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதால், யுத்தத்தினால் சேதமடைந்த சாவகச்சேரி நவீன சந்தை மற்றும் மரக்கறி விற்பனவுப் பிரிவு ஆகியவற்றை விரைவில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி நகரசபைத் தலைவர் பெனடிக்ற் தனபாலசிங்கம் யாழ்.அரச அதிபரைக் கடிதம்மூலம் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தத்தினால் சேதமடைந்த நவீன சந்தை, பொதுச் சந்தையில் மூன்று விற்பனவு பிரிவுக் கட்டடங்கள் ஆகியவற்றைத் திருத்துவதற்கு வடக்கு புனர்வாழ்வு மீள்குடியமர்வு அதிகாரசபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒருகோடியே 10 லட்சம் ரூபா வேலைகளில் 40 வீதம் பூர்த்தியாவதற்கு முன்னரேயே ஒப்பந்தகாரரால் முழுத் தொகையும் பெறப்பட்டுவிட்டதாக அறியப்படுகிறது.

எனவே, இவ்வேலைகளை விரைவில் செய்துமுடிக்க ஒப்பந்தகாரரைப் பணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுச் சந்தையில் சேதமடைந்த மூன்று கட்டடங்கள் திருத்துவதற்கென பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு அவற்றில் ஒரு பிரிவு வேலைகள் ஆரம்பிக்கப்படாமலேயே அதற்கென ஒதுக்கப்பட்ட 6 லட்சத்து 61 ஆயிரத்து 169 ரூபா ஒப்பந்தகாரரால் பெறப்பட்டுள்ளது.

அத்துடன், நவீன சந்தைக் கட்டடத் திருத்த வேலைக்கு ஒருகோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இதேவேளை, நல்லூர் ப.நோ.கூட்டுறவுச் சங்கம் இந்த வேலைகளுக்கென 97 லட்சத்து 3 ஆயிரத்து 992 ரூபா 80 சதத்துக்கு ஒப்பந்தம் செய்து கொண்டதுடன், ஆறு மாதங்கள் கடந்தும் சேவையைப் பூர்த்திசெய்யவில்லை.

எனினும் 40 வீதமான வேலைகள் பூர்த்தியாகும் முன்னரே 80 லட்சம் ரூபா ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. எனவே, இவ்வேலைகளை விரைவில் பூர்த்தியாக்கி நகரசபையிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-117)

# கூடுதலான ஆதரவும் உதவியும் வழங்க ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி உறுதி

ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாட்டில் உரை நிகழ்த்திய ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் மார்கிரட் வோஸ்ட்ஸ்ரோம் அம்மையார், சமாதான முயற்சிகளுக்கு முழு ஆதரவு வழங்கவும் புனர்வாழ்வுப் பணிகளுக்குக் கணிசமான நிதி உதவி வழங்கவும் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்திருக்கிறது என்று அறிவித்தார்.

இந்த நிதியுதவி முதற்படியாக இனங்காணப்பட்ட முன்னுரிமைப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றல், உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியமர்த்தல் போன்ற பணிகளுக்காகவே வழங்கப்படுகிறது என்றும் அம்மையார் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவொன்று சமீபத்தில் இலங்கை சென்று அங்கே சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தது. அந்தந்தப் பகுதிகளில் உள்ளவர்களுடன் கலந்து பேசவும் செய்தது.

அவற்றை அடுத்து இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் பணியில் தனது பங்கை அதிகரித்துக் கொள்வதற்கும், ஐரோப்பாவில் உள்ள தமிழர்களை சமாதானப் பணிக்கு ஆதரவளிக்கச் செய்வதற்கும் இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினருடனும் கூடுதலாகப் பேசுவதற்கும் கண்ணிவெடி அகற்றல், இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல் போன்ற காரியங்களுக்கு அதிக நிதியுதவி வழங்கவும் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்திருக்கிறது என்றும் அம்மையார் தெரிவித்தார்.

சமாதான முயற்சி இலகுவானது அல்ல. அது நீண்டதூரப் பயணம், எத்தனையோ இடைஞ்சல்கள், தடங்கல்கள் வரும். அவற்றையெல்லாம் சமாளித்துக்கொண்டு இலங்கை அரசும் புலிகளும் சமாதான முன்னெடுப்பில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றார்கள். அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

அதற்காக இரு தரப்பினரையும் அம்மையார் வெகுவாகப் பாராட்டியுள்ளார். நோர்வே அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணை வழங்கி வருவதில் காட்டிவரும் ஆர்வம் - அக்கறை ஆகிய வற்றிற்கும் அம்மையார் பாராட்டுத் தெரிவித்தார்.

(ம)

# பௌத்தர்கள், இந்துக்கள் இடையிலான ஒற்றுமையை வலுவடையச் செய்யும் விழா

## கண்டி தமிழ் சாகித்திய விழாவில் மல்வத்தை அனுநாயக்க தேரர் உரை

"பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் இந்நாட்டில் நிலவிவரும் சமய, கலாசார, பாரம்பரியங்களை தமிழ் சாகித்திய விழா தொடர்பான ஊர்வலம் நன்கு எடுத்துக்காட்டியது. சிங்களமக்களும் இந்த ஊர்வலத்தைக் கண்டுகளித்தார்கள். இவ்விரு இனங்களுக்கும் இடையிலான ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வலுவடையச் செய்வதாக இவ்விழா அமைந்திருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்."

- இப்படிக் கூறினார் மல்வத்தை பௌத்த பீடத்தின் அனுநாயக்கரான வண.அம்பன் வெல்ல ஸ்ரீ பஞ்ஞாசீஹ தேரர்.

கண்டி திரித்துவக் கல்லூரி இராமானுஜம் அரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மத்திய மாகாண சாகித்திய விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடக்க விழாவுக்கு முன் கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் இருந்து கலாசார பாரம்பரியங்களைக் கொண்டதாக ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்தில் மாணவர்கள், தமிழ் அறிஞர்கள், அரசியல் பிரமுகர்கள், இலக்கியப் படைப்பாளிகள் உட்பட 2000 பேர் அளவில் கலந்துகொண்டனர். உல்லாசப் பயணத்துறை அமைச்சின் செயலாளரான பிரதாப் இராமானுஜம் மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கிவைத்தார்.

விழாத் தலைவரும் மாகாண அமைச்சருமான வே.இராதாகிருஷ்ணன் தமது வரவேற்புரையில், தமிழ் பேசும் மக்களின் ஆக்கங்களுக்கு அழகூட்டி அவர்களை உய்விக்கும் விழா இது. அடுத்த விழா நுவரெலியாவில் இடம்பெறும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சிக்கு இந்த விழா பெருந்துணையாக அமையும் - என்றார்.

(ஐ)



நீராவியடி சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாயலத்தில் மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அஞ்சலி செலுத்தும் ஒருவர்.

# ஏ-9 வீதி புனரமைப்பு வேலைகள் ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகும்

கண்டி - யாழ். வீதி (ஏ-9)யைப் புனரமைக்கும் வேலைகளை ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்க முடியுமென இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் தலைவரான டி.டி.விஜேமான்ன தெரிவித்திருக்கிறார். இந்த வீதியில் 90 கிலோமீற்றர் தூரம் புனரமைக்கப்படும் எனவும் இதற்கென 65 கோடி ரூபா செலவிடப்படும் எனவும் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:- செலவிடப்படும் பணத்தில் 45 கோடி ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்க உறுதியளித்திருக்கிறது. புனரமைப்பு வேலைகளில் எட்டு கொந்தராத்துக்காரர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

வீதி புனரமைப்புக்கான ஒப்பந்தம் இவ்வாரத்தில் கிளிநொச்சியில் வைத்து கையெழுத்திடப்படும். இப் புனரமைப்புக்கு புலிகள் இயக்கம் முழு ஆதரவு தெரிவித்திருக்கிறது. புனரமைப்பு வேலைகளுக்கு அப்பகுதியில் போதிய ஆள்கள் இல்லாததால் தெற்கிலிருந்து தொழிலாளரைக் கூட்டிச் செல்ல நடவடிக்கைகள் எடுக்கப்படும் - இவ்வாறு அவர் கூறினார்.

(ம)

# கிழக்குப் பல்கலையின் 50 மாணவர்கள் வினாத்தாள்களை வீசியெறிந்து எதிர்ப்பு

## சமூகவியல் பரீட்சை நடைபெறாததற்கு ஆட்சேபம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட சமூகவியல் விசேட மாணவர்களுக்கான பரீட்சை நடைபெறாததால், சமூக விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த சகமாணவர்கள் 50 பேர் நேற்றுமுன்தினம் பரீட்சையைப் பகிஷ்கரித்தனர். தமக்கு வழங்கப்பட்ட வினாத்தாள்களை அவர்கள் வீசிஎறிந்து வெளியேறித் தமது எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

இதனால், நேற்றுமுன்தினம் பல்கலைக்கழகத்தின் அலுவல்கள் ஸ்தம்பிதமடைந்தன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட சமூகவியல் விசேட மாணவர்கள் 11 பேருக்கு கடந்த 11 ஆம் திகதி பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. ஆயினும் பரீட்சை நடைபெறவில்லை. 25ஆம் திகதியே நடைபெறுமென பின்னர் அறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பரீட்சைக்காக அம்மாணவர்கள் சென்றபோதும் வினாத்தாள்கள் வழங்கப்படவில்லை. இதையடுத்து இவர்கள் அங்கிருந்து வெளியேறினர். இவர்களுக்கு ஆதரவாக சமூக விஞ்ஞானவியல் பிரிவு மாணவர்களும் பரீட்சையைப் பகிஷ்கரித்ததுடன் உபவேந்தர், பதிவாளர், பீடாதிபதிகள், பரீட்சைகள் பதிவாளர் ஆகியோரின் அலுவலகங்களுக்கு எதிரே சென்று தமது எதிர்ப்பினைத் தெரிவித்துவிட்டு வெளியேறிச் சென்றனர்.

(ம)

## மாவீரர் பெற்றோர் வன்னி செல்ல வாகன ஒழுங்கு

வன்னி செல்லவுள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோரில் வலிகாமம் பகுதிப் பெற்றோர் மற்றும் உரித்துடையோருக்கென மேலும் இரு இடங்களில் வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவை வருமாறு:

★ சுன்னாகம் பகுதிப் பெற்றோர்களுக்கு கந்தரோடை - சுன்னாகம் வீதி.

★ கோப்பாய்ப் பகுதி பெற்றோர்களுக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் முன்றில்.

ஏனைய இடங்களைச் சேர்ந்த பெற்றோர்களுக்கான வாகன ஒழுங்கு பற்றிய விவரங்கள் நேற்றுமுன்தினம் உதயனில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-10)

# செயற்கரியன புரிந்த பெருந்தகை நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 123ஆவது குருபூசைத் தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

ஆசிரிய மணி
**அ.பஞ்சாட்சரம்**

எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதி, அறிஞர் பெருமக்கள் பல நூல்களைச் செய்தார்கள். கிடைத்தற்கரிய ஏடுகளைத் தேடி எடுத்துப் பரிசோதித்து அச்சிற் பதித்து வெளியிட்டார்கள். அவ்வாறு பார் மதித்த செந்தமிழ் நூல் ஏடுகளை ஆராய்ந்து பதிப்பித்தவர்களில் நாவலர் பெருமான் அவர்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றார். உலகப் பொதுமறை என்று வியந்து போற்றப்படுகின்ற திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் 1861இல் (ரௌத்திரி வருஷம்) வெளியீடு செய்தார். அவரது இந்த முயற்சியை அப்போதிருந்த அறிஞர்கள் பலரும் பாராட்டினார்கள். நாவலர் பதிப்புக்கு ஒரு தனி விசேடம் உண்டு. 'பிழைகளின்றிச் சீர்பதித்த நற்பதிப்பு நாவலர் தம் பதிப்பு' என்பார் நவாலியூர்ப் புலவர்.

திருக்குறள் நூலைப் பரிமேழகர் உரையுடன் நாவலர் வெளியிடுகின்ற சமயம் ஏற்றதொரு சிறப்புப்பாயிரத்தைக் கொடுத்தவர் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள். சிறப்புப் பாயிரத்தின் இறுதி அடி "யாரும் பாடு புகழாறு முக நாவல னவ்வாறச்சிற் பதிப்பித்தானே" என்பதாகும். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் கூற்றுப்படி அந்தக் காலத்திலேயே நாவலர் பெருமை எவ்வாறு இருந்தது என்பதை உணரலாம்.

நாவலர் பெருமான் அவர்கள் தாமே பல நூல்களை எழுதினார். பல நூல்களுக்கு உரை எழுதினார், பதிப்பித்தார்.

கல்வியின் மூலம் மக்களைக் கண் திறக்க வைத்தவர் நாவலர் பெருமான். பல சந்தர்ப்பங்களில் நாவலர் அவர்களது சேவையை அறிஞர்கள் பாராட்டி இருக்கின்றார்கள். நாவலர் அவர்களது எழுத்துக்கள் குறித்து இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறி இருக்கின்றார்கள்.

"நாவலர் பழைய நூல்களைப் பரிசோதித்துப் பிழையற அச்சிட வல்லவராயிருந்தும், அவர் அவ்வழியிற் செல்லவில்லை. மனிதனை வாழ்வாங்கு வாழ வைத்தற்கு அறிவு ஒழுக்கங்களை அபிவிருத்தி செய்யும் முறையில், அரிச்சுவடியிலிருந்து நூல்களை எழுதியும், நேரே பயன்படும் பழைய நூல்களைப் பதித்துக் கொண்டும், அவைகளைப் பயன்படுத்தும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுமிருந்தார். முதலாம் பாலபாடம், முதலாஞ் சைவ வினாவிடை என்னுங் கிரமத்தில் நாவலரின் நூலுரைகள் படிப்படியாக வளர்ந்து கொண்டிருந்தன. ஔவையாரையும் வள்ளுவரையும் வெளிப்படுத்தினார். பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையையே எடுத்துக்கொண்டார். வள்ளுவரை வெளிப்படுத்திய நாவலர் கோவையாரையும் பதிப்பித்தார். தேவாரத்தில் அகத்தியர் திரட்டும், திருவாசகமும் நாவலராற் பதிக்கப்பட்டன. தொல்காப்பியத்தை நோக்க 'அவருக்கு நேரம் ஏது!'.

பண்டிதமணி அவர்களது கூற்றிலிருந்து நாவலர் பெருமானின் உண்மை நோக்கத்தை நாம் அறிந்து கொள்ளலாம்.

நமது கலாசாரம், கந்தபுராண கலாசாரம் என்றார் நாவலர் அவர்கள். கந்தபுராணத்தில் வரும் நீதிக் கருத்துக்களைத் தமது பிரசங்கத்தினூடாக வெளிப்படுத்தினார். கந்தபுராண படனம் ஆலயங்களில் இடம் பெறவேண்டும் என்று போதித்தார். கந்தபுராணத்துக்கு உரை சொல்லியும் வந்தார். பிரசித்தி வாய்ந்த நல்லூர்க் கந்தசாமி கோயிலில் 1872 இல் நடந்த கந்தபுராண படனம் பிரசித்தி வாய்ந்தது. நாவலர் மருகர்



வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள் வாசிக்க நாவலர் அவர்கள் பயன் (உரை) சொன்னார்கள். வித்துவ சிரோமணி அவர்களைக் கவிநயச் சக்கரவர்த்தி என்றும், நாவலர் அவர்களை உரை நயச் சக்கரவர்த்தி என்றும் உலகங் கொண்டாடியது.

நாவலர் அவர்களைப் போல நூல்கள் பலவற்றை எழுதியும், பழைய தமிழ் நூல்களைப் பதிப்பித்தும் பெருந்தொண்டு புரிந்தவர், இராவ் பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை என்று எல்லோராலும் அவர் போற்றப்பட்டார். தாமோதரம்பிள்ளை அவர்கள், நாவலர் மறைவை அறிந்து "பொற்பொதிய மாமுனி புகன்ற மொழி குன்றியது" என்று அழுதார்.

நாவலர் மறைந்து தொண்ணூறு ஆண்டுகள் கழிந்து, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தெற்கு வீதியில் நாவலர் பெருமானது சிலை அவருக்குரிய சொந்த நிலத்தில் நிறுவப்பட்டது. உலகு மகிழ்ந்தது. நாவலர் சிலை நிலை பெயர்க்கப்பட்டுவிட்டது.

சிலை நிலை பெயரலாம்; நாவலர் பெருமான் அவர்களது சைவத் தமிழ்ச் சேவை உலகுள்ளவரை நிலைபெயராது நிலைத்து நிற்கும். நாவலர் பெருமான் அவர்களது ஆத்ம சக்தி இருந்தவாறு! ★

# மாவீரர் நாள் - நவம்பர் 27
# 2002

நெஞ்சினில் நெருப்பேற்றி
நிலம் மீட்கச் சென்றோரின்
நினைவோடு விளக்கேற்றி
நிற்கின்றோம் பணிகின்றோம்.

காற்றோடு காற்றாகி
கனலாகி ஒளிர்ந்தோரின்
ஆற்றலினை உள்வாங்கி
அவர் உறுதி தனை ஏற்றோம்.

கல்லறைக்குள் துயில்வோரின்
சொல்லெமக்குக் கேட்கிறது
வெல்வதற்கு வழி வகுத்தீர
வென்றெடுப்போம் உம் கனவை.

தாயகத்தின் தாகத்தால்
தவிக்கின்ற உம் நாவால்
தமிழீழ விடுதலையின்
பாடலை நாம் பாடவைப்போம்.




(C/24974)

## தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

# வாய் திறந்தோர் வார்த்தை பேசுங்கள்

## மலரும் விதைகள்!

புயலாக வீசிய பகைதனையே... இங்கு
பூகம்பம் போலாகி எரித்தனரே
உயர்வான எம்மண்ணில் உயிர்பெற்று – என்றும்
உடையாத கோட்டைகள் அழித்தனரே.

கயவர்கள் வேர்தனை அறுத்தனரே – எம்
கவலைகள் ஒழியவே துளிர்த்தனரே
வியர்வைகள் சொரிந்திட உழைத்தனரே – புது
வெற்றிகள் எமக்கு அளித்தனரே.

மாயங்கள் இல்லாத படைகள்தான் – தமிழ்
மாவீரர் ஆகிய விதைகள்தான்
உயிர்பெற்று மீண்டும் பிறந்திடுவர் – இவ்
உலகத்தில் ஒளியாக ஆகிடுவர்.

வி.கிருஷாந்தி.

## மரணத்தை வென்றவர்கள்!

மரணத்தை வென்றவரே
எம் இதயத்தில் உயர்ந்தவரே
மறத்தமிழர் போரினிலே
மண்ணுக்குள் வித்தாக – வீழ்ந்திடாத
வீரர்களே!
எம் கண்களில் உள்ள காவியமே
காவியங்கள் பல பாடி
களத்தினிலே போராடி
எம் நிலத்தினை தம் செங்குருதியால்
நனைத்தவரே!
இன்றும் அக் குருதி படிந்த
பாதையிலே நாங்கள் இங்கே
என்றும் உங்கள் நாமம்
வெல்லும்.

வி.கௌசிகன்
*நவாலி.*

## விழி நீர் கொண்டு...

விழி நீர் கொண்டு
முகம் மலர்த்தி
மலர்களால் மேனி துடைத்து
கல்லறையின் துயில் வீரர்களை
பணியோசையால் எழுப்பி
ஒளி தீபங்களுக்குள் முகம் கண்டு.

மௌன வார்த்தைகளால்
உறவுகள் உறவாடும்
உத்தமர்களின் பொன் நாள்
அதுவே கார்த்திகை 27ஆம் நாள்.

கி.கலைதாசன்
*யாழ்.*

## உரிய திசை நோக்கி.....

மனமெல்லாம் துயரெழுந்து மூட
நைந்து கன்றிய மேகம்
கசிந்து ஒழுகும் பொழுதிலே
ஓர் எழுகை நிகழ்த்தி போயிற்று வீரம்.

நவம்பர் மாதத்து பூக்களில் சொட்டும் நீரில்
தம் விம்பம் விழுத்திப்போன,
புதல்வர்களை
தேசம் எங்கும் தேடுகின்றோம்

உயிரில் கிளைத்த துயருடு கசிந்தொழுகும்
உணர்வில்
சுவடுகளின் வழிகாட்டல் துலங்கும்
27. அந்திசாய்கையில் எழும்சுடரில்
பல்லாயிரம் வதனங்கள் ஒளிர்ந்து கொள்ளும்.

மனித தீபங்களாய்,
ஒளிகாட்டி வழிகாட்டிப் போகின்றீர்
தலைவன் சேனையிலே
பேயுறைந்த புதல்வர்களே!
நண்பர்களே!

போர் நதி
புதிதாய் பரிணமித்த வழியூடும் போகிறது
உங்கள் கனவுகளையும்,
வாழ்வின் அர்த்தங்களையும் தன் அலையில் ஏற்றி.

சாபமேறி கல்லான இப்பூமியிலே
உலவிப் போயுறைந்தவரே
ஒரு காலத்தை பிரசவித்தீர்.

காலம் மலர்த்திய வழியூடே
இதே நாம் ஏற்றும் சுடரில்
தோன்றும் உங்கள் முகங்களில் விழி அசையும்.

பாறை வழி போர்நதி பாய்ந்தோடும்
துப்பாக்கி முழங்காமலும்
வெடிகள் அதிராமலும்
உரிய திசை நோக்கி...

- தேச மாணவன்.

## கனத்த விழிகளோடு இன்று...!

*மா ... வீரரே!*
*இன்று!*
*உம் நாள்*
*இல்லம் வந்துள்ளோம்.*
*உங்களின் கானம் கேட்கின்றது.*
*நீங்கள்...!*
*பூரிப்பால் உறங்குகின்றீர்கள்*
*எங்களுக்கோ...?*
*உங்கள் நினைவு மேகம்*
*எம் இதயவானில்,*
*கருக்கட்டி ..... ஒடுங்கி*
*எம் இமைக் கரையோரங்கள்*
*வெள்ளக் காடாய் ஓடுகின்றனவே!*
*வானம் கூட தனதஞ்சலியை*
*மழையாய், உம்நாள் பொழிவதைப் பாரீர்.*
*பினீக்ஸ் பறவையாய் இலட்சிய*
*பிடியில் தளராத தீரரே!!*
*உங்களின் ....*
*மார்பில் தலைபுதைத்தழும்*
*வரமாவது தாரீர்!*
*உம்மை ...*
*நுகர்ந்ததனால், இல்லை ..... இல்லை*
*தந்ததனால் சௌந்தர்யமாய் வாழ்கின்றோம்.*
*விடுதலை கனியும்.*
*இந்நாளில் ....*
*இளம் தளிராய் முகம் மலர்வீர்கள்.*
*விரிந்து வியாபித்திருப்பீர்கள்..*
*நிஜமான நினைவுகளைச் சுமந்த*
*உங்கள் நினைவில் தானே!*
*'தலைவன்' புலிக்கொடி ஏற்றுவான்.*

*புலோப்பளையூர்*
பே.பாஸ்கரன்



## மாவீரரின் நாளிது...

எல்லைகள் விடியுது – எம்
தொல்லைகள் முடியுது!
பிள்ளைகள் மகிழுது – எம்
உள்ளங்கள் குளிருது.

தீபங்கள் தெரியுது – ஒரு
தேசந்தான் பிறக்குது
சாபங்கள் முடியுது – ஒரு
சரித்திரந்தான் கிடைக்குது!

சிகரமாய் நிமிர்ந்தவர் – எங்கும்
சூரியனாய் நிறைந்தவர்
அகரமாய் வாழ்பவர் – என்றும்
ஆனந்தமாய் உறைபவர்!

பாவாயிரமியற்று – இங்கு
பூவாயிரந்தூவு
மாவீரரின் நாளிது – இன்று
மங்கல விளக்கேற்று!

ஞாசன்
*நெடுங்கொழு.*

## உம்மைத் தியாகித்து வாழ்கின்றோம்

தமிழ்த் தாயின் மானம் காக்க
தம் உயிர்தனை ஈந்த உத்தமரே
உம்மை நினைக்கும்
உன்னத நாளிது.
பாரினில் எறும்பும் என்றும்
வாழ்வதற்காய் ஆசைகொள்ளும் - நீரோ
தாயக மண்ணை நினைந்து
தாயை - தந்தையை - உறவுகளை
பாசமிகு சுற்றத்தை விலத்தி
கொண்ட இலட்சியம் தளராது
கடல், மண், விண் என
யாவிலும் கலந்து பகைவரை மாய்த்தீர்
வீழ்ந்தன உம் உடல்களன்றி
மாழாத இலட்சியங்கள் அல்ல.
விதையாய் வீழ்ந்த நீர்
முளைத்துள்ளீர் எம் மனங்களாய்
நியாயம் கிடைக்குமென்று
நிசப்தமாய்ப் பார்க்கின்றோம்....
பேச்சுக்கள் நடக்கின்றன
முன்னர்போல் நமை ஏமாற்ற
இந்நாள் அரசும் சதிசெய்தால்....
நீர்விட்டகன்ற ஆயுதங்கள்
நம்கைகள் ஏந்திடும் அன்றே
தியாகத்தின் அற்புதங்களே - உம்மைத்
தியாகித்து வாழ்கின்றோம் - இப்போது
விழியுறக்கம் கொள்ளுங்கள்
வழிபிறக்கும் தமிழனுக்காய்....

செந்தூர்ராஜ்.
*ஆறுகால்மடம்.*

## அஞ்சலிகள் மா–வீரர்களே!

அஞ்சினார்க்குப் பல மரணம்
அஞ்சாதார்க் கொரு மரணம்
பஞ்சணையில் தினம் உறங்கி
வஞ்சியரை அரவணைத்து
கொஞ்சி மொழி பேசுகின்ற
கோலவர்கள் பலர் இருக்க
தஞ்சமின்றித் தினமேங்கும்
தமிழ்மக்கள் உயிர் காக்க –
தமிழீழ மண்மீட்க –
தனித் தமிழன் கொடி பறக்க
(வி) வஞ்சமரில் நீர் மடிந்தீர் – எம்
அஞ்சலிகள் மா – வீரர்களே!

- புதுக்கவி

## கல்லறைகள் நனைகின்றன

சொந்த உணர்வை மறந்தவரே
பந்தபாசம் இழந்தவரே
ஈழத்தாய்வள் கலங்கியழ
வல்லைமைந்தன் அணிசேர்ந்தவரே
உந்தன் எண்ணம் நிறைவேறிவிடும்
சொந்த மண்ணில் தமிழ் வாழ்ந்துவிடும்
கண்களெல்லாம் கலங்குகின்றன
கல்லறையும் நனைகின்றது
உமையிழந்த உறவெல்லாம்
உறக்கமின்றித் தவிக்கின்றன
மா தலைவன் விழிகளிலும்
உம்நினைவு தேரிகின்றது
உந்தன் கல்லறையும் விழித்தெழுமா?
எழுகின்றது உறவே!
புதுப் புலிகளாய் மண்மீது படர்கிறது
மாதலைவன் வழியேற்றுத் தொடர்கிறது
நீர்கொண்ட இலட்சியம் நிறைவேறுமய்யா
பார்போற்றும் வரிப்புலி புதுப்பரணி எழுதுமையா!

பாவரசன்.

## தமிழீழத்தில் ஒளிரும் தீபங்கள்

*தேசத்தின் விடியலுக்காய் தேகத்தைக் கரைத்த மாவீரர்கள்*
*தமிழ் இதயங்களில் நிலைத்து வாழும் சிரஞ்சீவிகள்*
*பாசங்களின் நல்வாழ்வுக்காய் எதிரியாசறை புகுந்த...*
*முப்படைக்கும் எதிர்ப்படையாய் முடிவுரைத்த நாய...*
*மோசம் செய் ஆருயிரின் கருவறையில் இருந்தவர்...*
*வீசும் சமாதானக் காற்றிற்கு முனைப்பான கா...*
*பேசும் தமிழுலகின்றும் உம் நற்கொடையின் தியா...*
*ஈழத்திலொளிரும் பதினேழாயிரத்து அறுநூற்...*

நாற்பத்தெட்...
எஸ்.யேசுதா...
*கொழும்புத்துறை...*

## 96ஆவது அகவையில்

27.11.2002



## திருமதி சின்னம்மா நமசிவாயம்

*(மலாயன் ஓய்வூதியர்)*

நூற்றாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ
சிவிசிட்டி ஞானவைரவக் கடவுளை வேண்டுகின்றோம்.

"இந்திரகிரி"
இரும்பமதவடி,
காவெட்டி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
நந்திகா *(பேர்த்தி)*.

(10798)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
24 - 10 - 1928



விண்ணில்
27 - 11 - 1997

*மிருதங்க வித்துவான்*

## T.பாக்கியநாதன்

*ஆண்டைந்து ஆனதோ*
*அப்பாவின் ஆசை முகம் காணாமல்*
*கூண்டுக் கிளிகளாய் வளர்ந்த மக்கள்*
*கூவி அழைக்கிறார் கொஞ்சமும் ஆறாமல்*
*அம்மா அழுதழுது கண்ணீர் நிறைந்து நிற்க*
*அப்பாவைத் தேடி மக்கள் அலைந்து நிற்க*
*மாமாவைத் தேடி மருமக்கள் மாய்ந்து நிற்க*
*அப்பப்பா எங்கே என்று பேரமக்கள் ஏங்கிநிற்க*
*எங்கப்பா போனீர்கள்?*
*உங்கள் ஆன்மா சாந்தியடைய*
*இறைவனை வேண்டி நிற்கும்*

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(11007)

## மிதிவெடி அபாயம்

சண்டிலிப்பாய்,நவ.27

யாழ்.தொழில்நுட்ப கல்லூரி - கலட்டிச் சந்தி - யாழ் பல்கலைக் கழகத்துக்கு மேற்குப் புறம் ஆகியவற்றின் சுற்றாடலில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் தற்போதும் அங்கு உள்ளன. இவற்றை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதி காரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் ஜேர்மன் தொண்டு நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய கலந்துரையாடல் கூட்டத்தில் இதனைத் தெரிவித்த அவர் வரை படத்தின்மூலம் அங்கு வந்திருந்த உயர் அதிகாரிகளுக்கு விளக்கமாகச் சுட்டிக்காட்டினார்.

(ஐ-135)

## ஒளி விழா

சண்டிலிப்பாய்,நவ.27

மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் அருட்சகோதரி மே.த.லூடிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

'பாதுகாவலன்' ஆசிரியரும் யாழ். கத்தோலிக்க பதிப்பகத்தின் முகாமையாளருமான அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை இதில் கலந்துகொண்டு கிறிஸ்மஸ் செய்தியை வழங்குவார். மானிப்பாய் பங்குத்தந்தை அருட்திரு எட்பெணற் அடிகளார் ஆசியுரை நிகழ்த்துவார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(ஐ-135)

## சங்கக் கிளையில் அதிகாலைவேளை திருட்டு

யாழ்ப்பாணம்,நவ.27

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள சுன்னாகம் ப.நோ.கூ. சங்கக் கிளையில் ஓடு பிரித்து 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

(எ-5)

## காரைநகரில் நுளம்பு வலை விநியோகம்

காரைநகர்,நவ.27

காரைநகரில் மீளக்குடியமர்ந்துள்ள 250 குடும்பங்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தினால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த, குழந்தைகளை உடைய குடும்பங்களுக்கே இந்த நுளம்பு வலைகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-73)

## விற்பனையாகிறது

- ★ மெய்கண்டான் தினத்தாள் கலண்டர்கள்
- ★ அன்பளிப்பிற்கான றோள் கலண்டர்கள்
- ★ டயறி வகைகள்
- ★ அப்பியாசக் கொப்பிகள்
- ★ புதிய பாடத்திட்டத்திற்கமைவான புத்தகங்கள்
- ★ பொக்கற் கலண்டர்கள்

அனைத்தையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

மக்மிலன் புத்தகசாலை
இல.3, பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந் புத்தகசாலை
இல.165, மின்சார நிலைய வீதி,
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

(C/25081)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மீது
1939 - 09 - 10



விண்மீது
2000 - 11 - 27

அமரர்

## ஆறுமுகம் சண்முகநாதன்

*(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி)*

ஆண்டிரண்டு ஆனதையா உன் அன்பு முகங்கண்டு
அரியாலை மண்ணுன்னை அன்புடனே தேடுதையா
ஊன் உறக்கம் இல்லாது ஊருக்காய் உழைத்தாய்
உத்தமனாய் வங்கிச் சேவையதில் உயர்ந்தாய்
வீண்பொழுது போக்கிநீ வீணனாய் அலையாமல்
விருப்புடனே நற்பணிகள் செய்துமே வந்தாய்
மாண்புறும் உன்னுடலும் இராணுவ வாகனத்தால்
மண்மீது சாய்ந்ததுவோ மறுகிநாம் நிற்கின்றோம்.
காண்போம் உன்னுருவைக் கண்களால் நாமென்று
காத்திருந்தோம் நாமிங்கு கடுகிநீ சென்றதேனோ?
மாண்புடைய பாரதத்தில் மன்னுயிரும் பிரிந்ததுவோ
மறுபிறப்புத் தனிலேனும் வருவாய் எம்முடனே
ஆண்டு பல ஆனாலும் ஆறாது எம் துயரம்
அன்பு நிறை அப்பாவே ஆறுதலைத் தாராயோ
மீண்டொருகால் வாராயோ மிகைமகிழ்வு தாராயோ
மேலான ஈசற்கும் விண்ணப்பம் செய்வோமே!

*பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/25054)




# தாயகக் கனவோடு சாவினைச் சந்தித்த.....

தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றிலே 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி மறக்கமுடியாத ஒருநாள்.

ஆம்!.. இந்த மண்ணிலே - இந்த மண்ணுக்காக முதலாவது விதை வீழ்ந்த நாள். லெப்டினன்ட் சங்கர் (செல்வச்சந்திரன் சத்தியநாதன்) என்ற முதலாவது புலிமகன் தனது இனத்தின் விடுதலைக்காகத் தனது உயிரை ஈந்த மகத்தான நாள்.

அந்த வீரனின் தியாகப் பயணத்திலே இற்றைவரைக்கும் 17ஆயிரத்து 651 வீர மறவர்கள் தங்களது இன்னுயிர்களை ஈகம் செய்துள்ளனர். இன விடுதலைப் போரில் ஆண்கள் மட்டுமே ஈடுபட்டிருந்த காலம் ஒன்று இருந்தது. 1984ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அந்தப் புனிதப் பணியில் பெண்களும் தம்மை இணைத்துக் கொண்டார்கள்.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி முதலாவது பெண்மாவீரரான 2ஆம் லெப்டினன்ட் மாலதி தன்னை ஆகுதியாக்கினார். அந்தப் புலிமகளின் வரிசையில் இன்றுவரை 3ஆயிரத்து 767 பெண்கள் வீரகாவியமானார்கள்.

தரைப்புலிகளாக - கடற்புலிகளாக - கரும்புலிகளாக பல்வேறு வடிவங்களில் வளர்ச்சி பெற்ற புலிகள் படையில் மொத்தமாக இன்றுவரை களப் பலியான 17ஆயிரத்து 651 மாவீரர்களும் வடக்கு - கிழக்கில் உள்ள 21 மாவீரர் துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த மாவீரர்களை நினைவு கூரும் முகமாக 1989ஆம் ஆண்டு தொடக்கம் வருடாவருடம் நவம்பர் மாதம் 21ஆம் திகதிமுதல் 27ஆம் திகதிவரையான ஒருவார காலப் பகுதி தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் மாவீரர் வாரமாக அறிவிக்கப்பட்டது. முதல் மாவீரர் சங்கர் வீரச்சாவடைந்த தினமான நவம்பர் 27ஆம் திகதி, மாவீரர் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 1995ஆம் ஆண்டுமுதல் நவம்பர் 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகள் மாவீரர் எழுச்சி நாள்களாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. 1989ஆம் ஆண்டு தொடக்கம் மாவீரர் எழுச்சித் தினமானது தமிழ் மக்களினால் மிகுந்த உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதனையொட்டித் தமிழீழ தேசமெங்கிலும் சிரமதானம், அலங்கரிப்புகள், மரநடுகை வைபவங்கள், வீர வணக்க நிகழ்வுகள், கலை நிகழ்வுகள், சமூக சேவைப் பணிகள் என்பன பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மாவீரர்களின் நினைவுத்தூபிகள் நிழற்படங்கள், வீதிகள், வீடுகள், பொது இடங்கள் என்பன தூய்மைப் படுத்தப்பட்டு மாவீரர்களின் நினைவு கூரப்பட்டு வருகின்றது.

இதுவரை வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 17ஆயிரத்து 651 மாவீரர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 6 ஆயிரத்து 490பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 4ஆயிரத்து 535 பேரும், வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 2ஆயிரத்து 521 பேரும், திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 479பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சோந்த ஆயிரத்து 291பேரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 37பேரும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 298பேரும் அடங்குகின்றனர்.

மாவீரர் தினத்தின் இறுதிநாள் தமிழர்களின் வாழ்வில் ஒப்பற்ற புனித நாளாகும். மாவீரர் துயிலும் இல்லங்களில் நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஏற்றப்படும் தேசியக் கொடி 27ஆம் திகதி நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் இறக்கப்படும்.

27ஆம் திகதி மாலை தேசியத் தலைவரின் மாவீர்தின உரை இடம்பெறுவது வழக்கம். காலத்துக்குக் காலம் புலிகளின் அரசியல் நிலைப்பாடுகள் மற்றும் இராணுவ ரீதியிலான வெற்றிகள், எதிர்கால நகர்வுகள் என்பனபற்றி தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரை



யில் தெளிவுபடுத்திவருகின்றார்.

அதனால், இந்த உரையானது வருடவருடம் சர்வதேச நாடுகள் மற்றும் ஸ்ரீலங்காவின் அரச தரப்பினர் ஆகியோரால் உன்னிப்பாக நோக்கப்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' வானொலிமூலம் பிரபாகரன் ஆற்றும் இந்த உரையை அரசியல் ஆய்வாளர்கள் முதல் உலக வல்லரசுகளின் தலைவர்கள் வரை மிகவும் உன்னிப்பாக நோக்குகின்றனர்.

அந்த உரை நிறைவடைந்ததும் மாலை 6.05மணியளவில் (பழைய நேரப்படி) சமகாலத்தில் அனைத்து ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களிலும் மணிகள் ஒலிக்கப்படும். அதன்பின்னர், மாவீரச் செல்வங்களுக்குப் பொதுமக்கள், போராளிகள் அனைவரும் அகவணக்கம் செலுத்துவார்கள்.

அந்த நேரத்திலே உயிர் காப்புப் பணியில் ஈடுபடும் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் யாவும் அந்தந்த இடங்களில் நிறுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுவது வழங்கமாகும். அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகச் சுடரேற்றல் வைபவம இடம்பெறும். எமது வாழ்வில் ஒளி பிறக்கவேண்டும் என்பதற்காகத் தமது வாழ்வை இருளாக்கிக் கொண்ட மாவீரத் தியாகிகளின் நினைவாகத் துயிலும் இல்லங்கள், வீதிகள், வீட்டு வாசல்கள், பொது இடங்கள் அனைத்திலும் சுடரேற்றுவது வழக்கமாகும்.

தமது மக்களின் சுதந்திரமான சுபீட்சமான வாழ்வுக்காகத் தமது சுகங்களை துறந்தவர்கள்; நாங்கள் நிம்மதியாக உறங்கவேண்டும் என்பதற்காகத் தாங்கள் நிரந்தரமாகவே உறங்கிப் போனவர்கள். எங்களைச் சூழ்ந்துகொண்ட பகையை எரிப்பதற்காகத் தங்களை நெருப்பாக மாற்றிக் கொண்ட சூரியனின் புதல்வர்கள். இவர்கள்தான் மாவீரர்கள்.

## அற்புதன்

இவர்கள் மனிதப்பிறவிகள் அல்லர். தெய்வ அவதாரங்கள். இல்லை ... இல்லை... அதனைவிடவும் ஒருபடி மேலே உயர்ந்தவர்கள்.


பள்ளி செல்லவேண்டிய பிஞ்சு வயதிலும் - துள்ளிக் குதித்து விளையாடித்திரியும் இளமைப் பருவத்திலும் தமது இனத்துக்காக - இனத்தின் விடுதலைக்காகச் சொந்த பந்தங்கள் ஆசாபாசங்களைத் துறந்து தங்களது பெறுமதிமிக்க உயிர்களை ஈகம்செய்த இந்த மாவீரர்களின் தியாகத்திற்கு எல்லை என்பதேயில்லையாது.

காலத்துக்குக் காலம் எமது இனத்தின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளையும் இன அழிப்புக்களையும் கண்டு கொதித்தெழுந்த தலைவனின் வழியினில் ஆயிரமாயிரமாய் அணிதிரண்டு தம்பணி முடித்துத் தாயக வேள்வியிலே வித்தாகிப் போன மாவீரர்கள் இன்றைய நாளில் மட்டுமல்ல என்றைக்குமே நினைவு கூரப்படவேண்டியவர்கள். ☆

## மாவீர மறவர்கள்

உங்கள் விரம் செறிந்த
குருதி படிந்த நிலம் இது,
இங்கு மலரும் பூவில் கூட
உங்கள் நிழலாடும்
அதில் அமரும் வண்டு
கூட போராடும் உங்கள்
திறன் பாடும்
தளராத உங்கள் நெஞ்சை
தாண்டாது எந்த நெஞ்சும்!


- வி.கௌசிகன்
*நவாலி.*



## எம் முயிர்த் தீபங்கள்

மண்ணுயிர் காக்கவே
தம்முயிர் போக்கிய
எம்முயிர் தோழர்கள்
மாவீரர்!
கண் இமை காப்பதாய்
எம்முயிர் காத்திடும்
உத்தம வீரர்கள்
மாவீரர்!
எண் திக்கும் உயிர்பெற
எம்நிலை விடிந்திட
மணங்களில் மலராகி
மலர்ந்திடும் புலியானர்
மாவீரர்!
உலகத்தில் நிலைபெறும்
அவர் பெயர் உயிர் பெறும்
எம் மண்ணின் தீபங்கள்
மாவீரர்!

- இ.விஜயகுமன்
*அல்வையூர்*







வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடந்த மாவீரர் எழுச்சி நிகழ்வின் காட்சிகள் சில... (படங்கள் : வவுனியா செய்தியாளர்)







காரைநகரில் நேற்று மாலை மாவீரர் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. காரைநகரைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் மங்கள வாத்தியங்கள் சகிதம் விழா நடைபெற்ற யாழ்ரன் கல்லூரி மண்டபத்துக்கு அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் - மாவீரர்களின் பெற்றோர் மற்றும் போராளிகள் ஈகச்சுடர் ஏற்றுதை இரண்டாவது படத்திலும் - கௌரவிக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர் மண்டபத்தில் அமர்ந்திருப்பதையும் அடுத்துள்ள படத்தில் காணலாம். (படம்: காரைநகர் செய்தியாளர்)

## 50ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம்

(யாழ். மாவட்ட விளையாட்டதிகாரி)

இன்று (27.11.2002) புதன்கிழமை தனது 50ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் யாழ். மாவட்ட விளையாட்டதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் அவர்கள் தனது பதவியில் உயர்வுகள் பல பெற்று பல்லாண்டு காலம் சிறப்புற்று வாழ நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
செல்வி மரீன் சங்கா (மகள்)
திரு ஏ.குலேந்திரன் (மச்சான்)
திருமதி ச.குலேந்திரன் (சகோதரி)
செல்வன் கு.ர்ருசன் (மகன்)
செல்வி கு.ர்லக்ஷி (மகள்)

*இல, 32.சென். பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/25101)

---

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 02.12.2002ஆம் திகதி முற்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அதேதினம் பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். இதில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரும் அரச ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான பொது ஸ்தாபனங்களும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையவராவர்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| 01. தீவுபகுதி வடக்கு தோப்புக்காடு கந்தசாமி கோயில் கட்டடத் திருத்த வேலைகள் | 4850/- | 250/- |
| 02. தீவுப்பகுதி வடக்கு மாணிக்கவாசகர் மடம் களத் திருத்த வேலைகள் | 4850/- | 250/- |

கேள்விப்பத்திரங்களை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 28.11.2002 நண்பகல் 12.00 மணிவரை மேற்குறித்த கேள்விப்பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே.எக்ஸ்.செல்வநாயகம்,
உதவி அரசாங்க அதிபர்,
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை. (C/25096)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு நடத்தும் சமய அறிவுப் போட்டி - 2002

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே 04 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டியை (எழுத்துப் பரீட்சை) பின்வரும் ஏழு நிலையங்களில் நடத்துவதென எமது குழு தீர்மானித்துள்ளது.

01) யா/வட இந்து மகளிர் கல்லூரி
02) யா/உடுப்பிட்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை
03) யா/இராமநாதன் கல்லூரி
04) யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
05) யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
06) யா/இந்து மகளிர் கல்லூரி
07) யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்

மாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவான மேற்படி போட்டியில் அனைத்து மாணவர்களும் தவறாது பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களை 25.12.2002ஆம் திகதி வரை பாடசாலை அதிபர்களிடமிருந்தும் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகங்களிலிருந்தும் ரூபா 10/-ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைத் திகதி - 29.12.2002 முற்பகல் 9.30 மணி

சைவசமய விவகாரக்குழு,
(C/25097) யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

---

## யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கம் கிரிக்கெட் மத்தியஸ்தர் வகுப்பும் பரீட்சையும்

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்க ஆதரவில் கிரிக்கெட் மத்தியஸ்தகர் பணிப்பாளர் திரு. K.T.பிரான்சிஸ் தலைமையில் BCCSL குழு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19, 20, 21, 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் வகுப்புக்களை நடத்தி பரீட்சையையும் நடத்த உள்ளது. இவ்வகுப்புக்களில் 45 வயதுக்கு உட்பட்டவர்கள் பங்குபற்றலாம். பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுக்கும் கிரிக்கெட் பொறுப்பாசிரியர்களுக்கும் வயதுக் கட்டுப்பாடு இல்லை.

விண்ணப்பப் படிவங்களை "அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட், 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். பதிவுக் கட்டணம் ரூபா 500.00 விண்ணப்பப் படிவங்களை 10.12.2002 பிற்பகல் 5.00 மணிக்கு முன்னர் "அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட"டில் கையளித்தல் வேண்டும்.

26.11.2002 (C/25095) செயலாளர்.

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
முன்னாள் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத் தலைவருமான
**திரு. எம். கே. சிவாஜிலிங்கம்** அவர்களின்
அன்புத் தந்தையார்

### மகாலிங்கம் கனகலிங்கம்

அவர்கள் 26.11.2002 லண்டனில் காலமானார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நகராட்சி மன்ற பணிமனை,*
*வல்வெட்டித்துறை.* (11092) தலைவர், உறுப்பினர்கள், அலுவலர்கள், ஊழியர்கள்.

---

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

சித்தமருத்துவ
சத்திரசிகிச்சைமாணி
(B.S.M.S.) கற்கைநெறி
புதிய அனுமதி-2003/2004

மேற்படி பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிக்கு புதிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

*கற்கைநெறிக்காலம்:* ஐந்து வருடங்கள்

*விண்ணப்ப முடிவு திகதி:* 16.12.2002

அனுமதிக்கான நிபந்தனைகள்: மேற்படி கற்கைநெறிக்கு 2002ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) தேர்வில் கீழ் காணப்படும் கல்வித் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*அனுமதிக்க வேண்டிய ஆகக் குறைந்த கல்வித் தகைமை:*

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய மூன்று பாடங்களிலும் சித்தியும் பொது சாதாரண வினாத்தாளில் 30வீதத்திற்குக் குறையாத புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் Z புள்ளிகள் உள்ளடங்கலாக பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும்.

*முக்கிய குறிப்பு:*
எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பத்துடன் க.பொ.த. (உயர்தரம்) பெறுபேற்றுப் பத்திரத்தினதும் மொத்த புள்ளிகளினதும் (Z score உள்ளடங்கலாக) போட்டோ பிரதிகளை இணைக்கவேண்டும். அத்துடன் புதிய பாடத்திட்டத்தின் கீழ் தோற்றியோர் பொது சாதாரண வினாத்தாளின் புள்ளிகளை நிரூபிக்கும் ஆவணத்தின் போட்டோப் பிரதியையும் இணைத்தல் வேண்டும்.

மேற்குறித்த கல்வித்தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத, குறிப்பிட்ட ஆவணத்தின் போட்டோப்பிரதி இணைக்கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்பமுடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களை *யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்திலோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையிலோ* ரூபா 50/- செலுத்திய பற்றுச் சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோர் "*நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*" என்னும் பெயருக்கு ரூபா 50/-ஐ செலுத்தி பெற்றுக் கொண்ட காசுக்கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுய விலாசமிடப்பட்ட 20X10 செ.மீ. அளவுள்ள கடித உறையை "*கொழும்பு ஸ்ரோர்ஸ் / அலுவலகம், EG 4, சென்றல் றோட், கொழும்பு - 12.*" *தொலைபேசி இலக்கம் 435620* எனும் முகவரிக்கு அல்லது "*உதவிப் பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்*" அல்லது "*உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா*" என்னும் முகவரிக்கு அனுப்புவதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்ப/ஒப்படைக்க வேண்டிய முகவரி:

உதவிப் பதிவாளர்,
பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

**பதிவாளர்** (C/25100) 2002.11.26

---


**கனடாவில் STUDENT'S VISA**

விவரங்களுக்கு கிழமை நாள்களில் 4.30 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும்
140, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(பரமேஸ்வராச் சந்தி அருகில்)
(11094) T.P. 222 - 2478.


---

## பிற இட வியாபாரிகளும் சாவகச்சேரி சந்தையில்

தென்மராட்சி,நவ.27

சாவகச்சேரி சந்தைக்கு வெளியிடங்களிலிருந்து வியாபாரிகள் அதிகளவில் வரத்தொடங்கியுள்ளனர்.

மருதனார்மடம், கல்வியங்காடு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், வடமராட்சி ஆகிய பகுதிச் சந்தைகளிலிருந்தும் வியாபாரிகள் இங்கு வருவதால் சாவகச்சேரி சந்தைக்கு வரும் கத்தரிக்காய், பயற்றங்காய், முருங்கக்காய், பாவற்காய் போன்றவற்றுக்குப் பெருங்கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கோவா, கரட், முள்ளங்கி, மோதகவல்லி, கரணை போன்ற மரக்கறி வகைகள் ஏனைய சந்தைகளிலிருந்து பெருமளவில் சாவகச்சேரி சந்தைக்கு வருவதையும் காணமுடிகிறது. (ஒ-117)

---

## கண்ணீர் அஞ்சலி



இணுவில் கிழக்கைச் சேர்ந்த
திருமதி
**மாசிலாமணி செல்வரத்தினம்**
அவர்கள் காலமானதையிட்டு
நாம் மிகவும் துயரமடைகின்றோம்.
எங்கள் கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்குவதோடு
அவரது ஆத்மா சாந்தி அடையப்
பிரார்த்திக்கின்றோம்.

(11091)
*இணுவில் கிழக்கு* - மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாசிலாமணி செல்வரத்தினம்

இணுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி மாசிலாமணி செல்வரத்தினம் அவர்கள் நேற்று (26.11.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சுப்பையா மாசிலாமணியின் அன்பு மனைவியும், சுசிந்திராதேவி, ஸ்ரீதவராணி, பாஸ்கரன் (இத்தாலி), விஜயகேதீஸ்வரி (இத்தாலி), கிருபாகரன் (பிரான்ஸ்), கருணாகரன் (பிரான்ஸ்), ஜெயகௌரி (ஆசிரியை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகலிங்கம், கமலாதேவி, யோகரத்திரம், கணேசலிங்கம் (பிரான்ஸ்), நாகேஸ்வரி (கனடா), இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராஜா, விஸ்வநாதன் (ஆசிரியர் - விக்னா கல்வி நிறுவனம்), சிவநேசன் (இத்தாலி), மகாலட்சுமி (இத்தாலி), உஷாராணி (பிரான்ஸ்), ராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விபிலகுமார் (லெபனான்), நீரஜா (லண்டன்), அனுர்ஜன் (சுடர் ஒளி - கணனிப்பகுதி), பானுரேகா, சாருஜன், ரம்மியா (இத்தாலி), வினோத் (இத்தாலி), பவித்திரன் (இத்தாலி), திவாகரன் (இத்தாலி), சமந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2002) புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகாமி அம்மன் கோவிலடி,*
*இணுவில் கிழக்கு, இணுவில்.* (11090)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

### செல்லையா திருநாவுக்கரசு

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா திருநாவுக்கரசு (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லமுத்து தம்பதி ரின் மகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் இரத்தினம்மா, அடைனம்மா, காலஞ்சென்ற துரைராஜா மற்றும் பூபதி, நாகம்மா, சின்னராசா காலஞ்சென்ற நடராஜா மற்றும் கணேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சறோஜா, யோகேஸ்வரன் (கனடா), விக்கினேஸ்வரி, சோதிமலர், சுரேசன் (கனடா), சிவபாலன் (கனடா), கமலவேணி (ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி), சாந்தினி (கனடா), சத்தியேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கனகசபாபதி, சிவகுமாரி (கனடா), விக்கினேஸ்வரன், பாலகிருஷ்ணன், தமயந்தி (கனடா), வசந்தகுமாரி (கனடா), விஜயகுமார் (சந்திரன் கடை), ஜெகன் (கனடா), குணநாயகி (கனடா) ஆகியோரின் மாமனாரும் சுதர்ஜன், கலையரசி - சதீஷன், தாட்சாயனி, நிவேதா, சஜித்தா, வனஜா - சுதேஸ்வரன், சுகந்தி - தயாபரன், சசிகலா, விமல்ராஜ், கமல்ராஜ், பிரதீபா, பிரதீசன், பிரேமிகா, திபேசன், நிந்துஜன், சஜீவன், ஆரணி, சுவேதா, திவ்யா, சரண்யா, நிலோஜன், டுஷா, அனோஜா, ஆகாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெதுஷன், பானுஜன், மிதுஷன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (11095)

தகவல்
தி.யோகேஸ்வரி (மனைவி)

### செல்லையா சண்முகம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.10, செட்டித்தெரு லேன், நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சண்முகம் நேற்று (26.11.2002) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பாக்கியலெட்சுமி தம்பதியினரின் மருமகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கருணைநாயகி, சொர்ணலட்சுமி, நடராசா, சுப்பிரமணியம், சிற்றம்பலம் ஆகியோரின் சகோதரரும் சாந்தினி, சகுந்தலா (கனடா), உஷாராணி (கனடா), விஜயகுமார் (சுவிஸ்), உதயகுமார் (கனடா), விஜிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சொர்ணகாந்தன், ஜெகதீசன் (கனடா), ஜெயகாந்தன் (கனடா), நிணா (சுவிஸ்), முரளிதரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை, நடராசா மற்றும் இந்திராவதி (கனடா), அரசரெத்தினம், பரமேஸ்வரி (பிரான்ஸ்), செல்வராணி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் சஜீவனி, துளசிகன், டிலக்ஷி, டினோஜன், மதுரிகா, அனோஜன், சுஜிதா, அபிஷன், வினோத், நாதிகா, டினேஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2002) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.மகாலட்சுமி (மனைவி), ச.விஜயகுமார் (மகன்),
(11096) டா.சொர்ணகாந்தன் (மருமகன்).

# தியாகிகளை நினைவு கூரும் வேளையில் நெடுந்தீவு நிலைமையால் வேதனை!

## யாழ்., மன்னார் ஆயர்கள் கூட்டறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.27

எம் மண்ணின் மீட்புக்காக தம் உயிரைத் துறந்த அனைத்துத் தியாகிகளையும் தமிழ்மக்கள நினைவுகூரும் இந்த நேரத்தில் எமது தமிழ்மண்ணில் குறிப்பாக நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் பதற்ற நிலையால் நாம் கவலை அடைந்துள்ளோம்.

நெடுந்தீவில் தற்போது ஏற்பட்டிருக்கும் பதற்றமான நிலைமை தொடர்பாக யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப ஆண்டகை ஆகியோர் கூட்டாக விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-


எமது நாட்டில் சமாதானத்துக்கான சூழ்நிலை மலர்ந்து வரும் இவ்வேளையில், கிறிஸ்தவ மக்கள் அனைவரும் இறந்து போனவர்களைப் பற்றி நினைக்கும் நவம்பர் மாதத்தில், தமிழ்மக்கள் அனைவரும் சிறப்பாக எம் மண்ணின் மீட்புக்காக தம் உயிரைத்துறந்த அனைத்துத் தியாகிகளையும் நினைவுகூரும் நேரத்தில், எமது தமிழ்மண்ணில் குறிப்பாக நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் பதற்ற நிலையால் நாம் கவலை அடைந்துள்ளோம்.

அரசியல் கட்சிகள் தம் கட்சி அரசியலை முன்னெடுக்க பல்வேறு இடங்களில் செயற்படுவதும், முயற்சிப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே. எனினும் அவர்கள் எப்போதும் மக்களுடைய உணர்வுகளை கருத்திற்கொண்டு செயற்படவேண்டியது முக்கியமானது, இயற்கையானது.

முழுநாட்டின் நலனை மறந்து தனி ஒரு கட்சியின் நலனை மட்டுமே நோக்காகக் கொண்டு உழைப்பது சமாதானத் தேடலுக்கு முரண்பாடானது என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

எமது முழுநாட்டின் சமாதானத்தை கவனத்திற்கொள்ளாது நாம் செயற்படும்போது எமது நாட்டில் சமாதானத்தை வெறுக்கும் பேரினவாதிகளின் கைகளுக்குள் நாம் சிக்கிவிடுவோம் என்பதும் உண்மையாகும்.

எனவே இப்பேராபத்தில் இருந்து எம்மைக் காத்துக்கொள்ள, தீவகத்தில் தோன்றியுள்ள முறுகல் நிலையைத் தணித்து, அமைதி சூழலை ஏற்படுத்த அரசும், விடுதலைப் புலிகளும், ஈ.பி.டி.பி. கட்சியினரும் சம்பந்தப்பட்ட மற்ற அரசியல் கட்சிகளும் மக்களும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென வெகு விநயமாக வேண்டுகிறோம் - என்றுள்ளது. (ஒ-4)



யாழ்.பலாலி வீதியில் உள்ள ஆலடிச் சந்தியில் மாவீரர் நினைவுநாளையொட்டி அமைக்கப்பட்டுள்ள அலங்காரத்தைப் படத்தில் காணலாம். பின்னணியில் தெரிவது இராணுவநிலை. மாவீரர் நினைவாக ஸ்தாபிக்கப்பட்டு பின்னர் தகர்க்கப்பட்ட நினைவுத் தூபி இருந்த இடத்தில் இந்த அலங்காரம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய்நாட்டுப் பாதுகாப்புக்கு அமெரிக்காவில் திணைக்களம்

வாஷிங்டன்,நவ.27

தாய்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களத்தை உருவாக்கும் முக்கியமான சட்டமூலத்தை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு. புஷ் நேற்றுக் கையெழுத்திட்டு சட்டமாக்கினார்.

இந்தச் சட்டத்தை ஏற்படுத்த உதவியதற்காக அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு கையெழுத்திடுமுன் அதிபர் புஷ் நன்றி தெரிவித்தார்.

உலக வர்த்தக மையம், பென்டகன் ஆகியவற்றின்மீது 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்கள்



தாய்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்கள சட்ட வரைவில் அதிபர் புஷ் கையெழுத்திடுகிறார்.

போன்ற தீவிரவாத நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் நடப்பதைத் தடுப்பதே தாய்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒரே பணியாகும்.

இத்திணைக்களம் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பணியாளர்களைக் கொண்டிருக்கும். அத்துடன் 22 கிளை நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயற்படும். இத்திணைக்களத்திற்கு அமெரிக்க அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் சுமார் 400 கோடி அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்திற்கான சட்ட வரைவில் கையெழுத்திட முன்னர் உரையாற்றிய அதிபர் புஷ் - புதிய யுகத்தின் ஆபத்துக்களில் இருந்து அமெரிக்காவையும், அதன் குடிமக்களையும் பாதுகாக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை இது என்று தெரிவித்தார். (ஓ)

### ஐ.நா.தீர்மானத்தின்படி பணி இன்று ஆரம்பம்

# பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்பதை நிரூபிக்கும் பொறுப்பு ஈராக்குக்கு உண்டு!

## சோதனைக் குழுத் தலைவர் எச்சரிக்கை

லண்டன்,நவ.27

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் தன்னிடம் இல்லை என்றுகூறும் ஈராக் அதனை நிரூபிக்க வேண்டும்.

ஈராக் சென்றுள்ள ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹன்ஸ் பிலிக்ஸ் எச்சரித்துள்ளார்.

பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஈராக்கில் உள்ளனவா என்பது குறித்து ஆராய 4 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் ஈராக் சென்றுள்ள ஆயுதக் கண்காணிப்பாளர்கள் இன்று ஈராக்கில் தமது பணிகளை ஆரம்பிப்பர். இது தொடர்பாக கூறுகையிலேயே பிலிக்ஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

பேரழிவுதரும் ஆயுதங்கள் சம்பந்தமாகக் கடந்தமுறை ஈராக் அறிக்கையொன்றை ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களிடம் வழங்கியது. ஆனால், அந்த அறிக்கையில் பல இடங்கள் கேள்விக்குரியனவாக உள்ளன.

ஆகவே, இம்முறை ஆவண ரீதியாகவோ அல்லது வேறு எந்த விதத்திலோ ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்பதை அந்தநாடு நிரூபித்தாக வேண்டும்.

ஆயுத பரிசோதனைக்கு முழு அளவில் ஒத்துழைப்பதாக ஈராக் தாராளமாக வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. இது ஆயுத சோதனைப் பணிகளுக்கு நல்லதொரு ஆரம்பமாகும். ஆனாலும், சந்தேகக் கண்களுடனேயே ஆயுத சோதனைப் பணியை நாம் ஆரம்பிக்கின்றோம் என்றார் அவர்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் கூடுதல் அதிகாரங்களுடன் இம்முறை ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக்கில் தமது பணியை மேற்கொள்ளவுள்ளனர். இஸ்லாமிய நாடான ஈராக்கின் மசூதிகளுக்குள் நுழைந்துகூட சோதனை நடத்த அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன் உட்பட ஆதரவு நாடுகளின் உதவியுடன் அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை ஐ.நா. பாதுகாப்புச் சபை அங்கீகரித்தது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே ஈராக்கில் ஆயுத சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் இத்தீர்மானம், ஈராக் வெளியிடும் எந்தவொரு கூற்றையும் கொண்டு ஈராக் மீதான போரை நியாயப்படுத்தவே வழிசெய்கிறது என்று ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் நாஜி சப்ரி, ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு எழுதியிருந்த கடிதத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# பெனாஸிர் - முஷாரப் இரகசிய உடன்பாடாம்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுடன் அதிபர் முஷாரப் ரகசிய உடன்பாடு வைத்துக்கொண்டு இருக்கிறார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

முஷாரப் ஆதரவு பெற்ற பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த ஜபருல்லாகான் ஜமாலியை வெற்றி பெறச் செய்வதற்காக அவர் பெனாஸிருடன் ரகசிய உடன்பாடு செய்துகொண்டார். இந்த உடன்பாடு காரணமாகத்தான் பிரதமர் தேர்தலில் இஸ்லாமிய கூட்டணி வேட்பாளர் பஸ்லூர்ரகுமானை ஆதரிக்காமல் தன் கட்சி சார்பில் பெனாஸிர் ஒரு வேட்பாளரை நிறுத்தி மும்முனைப் போட்டியை ஏற்படுத்தினார். இதனால்தான் ஒரு வாக்கு வித்தியாசத்தில் ஜமாலி வெற்றிபெற முடிந்தது.

பிரதமர் தேர்தலில் முத்தா ஹிதா மஜ்லிஸ் இ அமல் கட்சி வேட்பாளரை ஆதரிக்கப்போவதாக பெனாஸிர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

உடனே முஷாரப் விரைந்து செயற்பட்டு பெனாஸிருடன் ரகசிய உடன்பாடு வைத்துக்கொண்டார்.

இதன் பலனாக பெனாஸிரின் கணவர் ஆசிப் அலி சர்தாரி சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். கராச்சியில் சாகும் தறுவாயில் இருக்கும் அவரது தாயாரைச் சந்திக்கவும் அனுமதித்தார்.

பெனாஸிர் மற்றும் அவர் கணவர் மீதுள்ள வழக்குகளை தள்ளுபடி செய்யவும் கூட முஷாரப் ஒரு கட்டத்தில் தயாராக இருந்தார்.

பெனாஸிருடன் ஏற்பட்டிருக்கும் உடன்பாட்டின்படி ஆசிப் சர்தாரி விடுதலை செய்யப்படுவார். அவர் நாட்டைவிட்டு வெளியேறி விடுவார். பெனாஸிர் 2 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தான் திரும்பி அரசியலில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்.

இவ்வாறு பாகிஸ்தான் நாட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஓ)

### ஒஸ்லோ மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி

# சுப்பிரமணியசுவாமியின் தடை முயற்சிக்கு சென்னை நகர மேல் நீதிமன்றம் ஆப்பு!

சென்னை,நவ.27

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான சமரச மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி பங்கேற்கத் தடை விதிக்க சென்னை மேல்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

சமரச மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி பங்கேற்க இடைக்காலத் தடை விதிக்கக் கோரி ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி சென்னை மேல்நீதிமன்றத்தில் மனுத்தக்கல் செய்தார்.

இந்த மனு மீதான முதற்கட்ட விசாரணை முடிவில் நீதிபதிகள் தெரிவித்ததாவது:

இடைக்காலத் தடை விதிக்கத் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, சமரச மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி பங்கேற்க இடைக்காலத் தடை விதிக்க முடியாது.

இருப்பினும், பொடா சட்டப் பிரிவு 21 குறித்து தீவிர சந்தேகங்களை எழுப்பியுள்ளார் மனுதாரர். [illegible] அதுதொடர்பான ஆவணங்களை மத்திய அரசு சமர்ப்பிக்கவேண்டும். இவ்வழக்கு விசாரணை ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

ஒஸ்லோ அரங்கில்

ஒஸ்லோ மாநாட்டில் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்பதால், இந்தியப் பிரதிநிதி யாரும் பங்கேற்கக்கூடாது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒஸ்லோ மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி பங்கேற்பது என்பது மத்திய அரசு அண்மையில் கொண்டு வந்த பொடா சட்டத்தை மீறியும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் செயற்படுவது போலாகிவிடும் என்று சுவாமி மனுவில் குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கில் சுவாமியே ஆஜராகி வாதாடினார்.

மத்திய அரசின் மேலதிக சட்டமா அதிபர் வி.டி.கோபாலன் வாதிடுகையில், சமரச மாநாட்டுத் தொடக்க விழாவில் மட்டும் இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சகச் செயலர் பங்கேற்கிறார்; அவர் அங்கு யாருடனும் பேசவோ, கலந்து உரையாடவோ மாட்டார்' என்றார். (ஓ)

### பத்திரிகையாளர்கள் கைது!

பிரிட்டிஷ் பத்திரிகையாளர்கள் இருவர் பங்களாதேஷ் நாட்டில் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டிருந்த சைபர் மாலிக், லிபொன்டோ புறூனோ சொரன்ரினோ என்ற இரு பத்திரிகையாளர்களுமே கைதாகியுள்ளனர். (ஐ)

# ஆரோக்கியமானவரை மணக்க எய்ட்ஸ் நோயாளிக்கு அனுமதி

பெய்ஜிங்,நவ.27

சீனாவில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட பெண்ணை, ஆரோக்கியமான ஆண் ஒருவர் திருமணம் செய்து கொள்ள அனுமதி தரப்பட்டுள்ளது.

உலக எய்ட்ஸ் நோயாளிகள் தினமான டிசெம்பர் முதலாம் திகதி அவர்கள் திருமணம் செய்து கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

தென்மேற்கு சீனாவில் சிமாங் என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். 28 வயதான அந்தப் பெண் போதை மருந்துக்கு அடிமையானவர். அவருக்கு எய்ட்ஸ் நோய் வந்தது. அவருடன் உறவு வைத்திருந்த ஆண், அப்பெண்ணுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பது தெரிந்தும் உறவை முறித்துக்கொள்ள விரும்பவில்லை. எய்ட்ஸ் நோய்க்கிருமி தனக்குத் தொற்றாத வகையில் அவர் நடந்து கொள்கிறாராம்.

மூன்றுமுறை மருத்துவ சோதனைக்குப் பிறகு இவர்கள் திருமணம் செய்துகொள்ள மருத்துவர்களும் சட்ட சபை உறுப்பினர்களும் அனுமதித்துள்ளனர்.

எய்ட்ஸ் நோயாளிகள் திருமணம் செய்துகொள்ள சீனாவின் சட்டம் தடை செய்யவில்லை. எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான எச்.ஐ.வி. என்னும் கிருமி சீனாவில் 15 லட்சம் பேருக்குத் தொற்றி இருக்கக் கூடும் என்று ஐ.நா. சபை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஓ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தரமான Prima கோழிக் குஞ்சின் விலை குறைக்கப்பட்டுள்ளது. Broiler 38/-, வெள்ளைப் பேடு 46/-, சிவப்புப்பேடு 50/-. முன்பதிவு செய்து 28-11-2002 வியாழக்கிழமை மாலை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10835)

AIWA (3CD Audio Video Mp3 1200W) செற்ஒன்றும் வீடு அல்லது கடைப்பாவனைக்குரிய ஜெனரேற்றர், Panasonic 26W சிறிய ரேப்செற் ஆகியனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ஜெயசீலன், C/o ரட்ண சபாபதி, வைரவர் கோயிலடி, நாலுகால் மடம், ஆனைக்கோட்டை. (10948)

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சந்தை விலையில் இருந்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். (சுத்தம் செய்தல் இலவசம்) Y.A.சுரேஸ் (கிராமக் கோட்டுச் சந்தியில் இருந்து 150m உள்) பருத்தித்துறை. (11038)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10640)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, வட்டக்குளம் முன்பாக, பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய். (11030)

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்து தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன், 227பிறவுண் வீதி (ஈரியன்குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம்.(11031)

## வகுப்புகள்

ஆங்கிலத்தில் சுலபமாக கதைக்கப் பயில வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் தனித்தனி கவனம் - ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426(302), K.K.S வீதி, யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (11011)

## திருமண சேவை

எம்மிடம் சாதகக் குறிப்புக்கள் உள்ளன. தொடர்பு: சொர்க்கம், த.பெ.இல.77, மில்க்வைற் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (11055)

1958, செவ்வாய் 12, படித்த, கௌரவ குடும்ப மணமகளுக்கு அரச/தனியார் துறை மணமகன் வேண்டும். வீடு உட்பட சீதனமுண்டு. மணமக்களின் தேவைக்கு நாடுங்கள், துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (11017)

1973, அத்தம் செவ்வாய் 12 ஆசிரியைக்கு Professional உத்தியோகத்தர் மணமகன் வேண்டும். சீதனமுண்டு. மணமக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (11016)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தங்க ஆபரணம் ஒன்று செல்வச்சந்நிதி ஆலயத்திற்கும் உடுப்பிட்டி வாசிகசாலைக்குமிடையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: ச.சின்னத்தம்பு, நெற்கொழு கிழக்கு, வல்வெட்டித்துறை. (11060)

## தவறிவிட்டது!

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு, பொற்கொல்லர் வீதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் உருத்திரகுமார் என்பவரின் தே.அ.அ. (இல.670822745V), விசேட வேலைத் தள அடையாள அட்டைகள் மடத்தடிச் சந்தி, சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.வீதியில் 21-11-2002 வியாழக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடற்கல்வியலகு I, யாழ்பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்துதவவும். (11051)

## ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக ஞானச்சுடர் கார்த்திகை மாத வெளியீடு இடம்பெறவுள்ளது. மலரின் வெளியீட்டுரையை புத்தொளி ந.சிவபாதமும் மதிப்புரையினை மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும் நிகழ்த்தவுள்ளார்கள். (ஒ)

---

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் (சங்கரத்தை) | | விண்ணில் (ஜேர்மனி) |
|---|---|---|
| 02 - 05 - 1960 |  | 27 - 11 - 1999 |

## திருநாமம் கணேசலிங்கம்

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இப்படி ஒரு பிள்ளையைப் பெற்ற பெற்றோர் என்ன தவம் செய்தனரோ? என்று வாழ்ந்து காட்டி காற்றாகிப்போன நீங்கள் உலகத்தை விட்டுப்போயும் எம் உள்ளத்தை விட்டுப் போகவில்லை!

*உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

*குளத்தடி, சங்கரத்தை.* பெற்றோர், அன்பு உறவுகள். (11015)

---

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**PROF. SIVAPATHASUNTHARAM MAGESWARAN**

# MEMORIAL LECTURE

*Date & Time:* **29th November, 2002 (Friday) at 3.00 p.m.**

*Venue:* **Kailasapathy Auditorium, University of Jaffna.**

*Speaker:* **Prof. S.Mohanadas,** *Rector/Vavuniya Campus.*

*Title:* **The Palmyrah Palm and the Composition of Palmyrah fruit pulp**

Those who are interested are cordially invited.

(C/25083) **Vice-Chancellor**

---

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

# மீள்கேள்வி அறிவித்தல் - 2003ஆம் ஆண்டு

01.11.2002ஆம் திகதிய "வலம்புரி, உதயன்" பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக் கடைகள் குத்தகைக்கு மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி: 2002.12.09ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை.

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி: 2002.12.10ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை.

கேள்விகள் திறக்கப்படும் திகதி: 2002.12.10ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு.

**அட்டவணை:**

| குத்தகையின் விவரங்கள் | மாதவாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை (வற்வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1. பண்டத்தரிப்பு பொதுச் சந்தைகடை இல. 14 குத்தகைக்குவழங்கல் | 300/= | 300/= | 1500/= | 35,000/= |
| 2. மானிப்பாய் பட்டினம் | | | | |
| 1. மானிப்பாய் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 2000/= | 4,00,000/= |
| 2. ஆட்டிறைச்சிக் கடை (சந்தை) | 300/= | 300/= | 1500/= | 70,000/= |
| 3. மானிப்பாய் கிராமம் | | | | |
| 1. காக்கைதீவுச் சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 20,000/= |
| 2. நவாலி பிரசாத் சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 1,00,000/= |
| 3. சாவற்கட்டு சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 75,000/= |
| 4. நவாலி பிரசாத் ஆட்டிறைச்சிக்கடை | 300/= | 300/= | 1500/= | 30,000/= |
| 5. சாவற்கட்டு சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 350/= | 300/= | 1500/= | 30,000/= |
| 6. சாவற்கட்டு சந்தை கருவாட்டுக் கடை | 200/= | 300/= | 1500/= | 5,000/= |
| 4. பண்டத்தரிப்பு பட்டினம் | | | | |
| 1. பண்டத்தரிப்பு சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/= | 300/= | 1500/= | 7,000/= |
| 2. பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக் கடை இல. 1 | 250/= | 300/= | 1500/= | 7,000/= |
| 3. பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக் கடை இல. 2 | 250/= | 300/= | 1500/= | 7,000/= |
| 5. பண்டத்தரிப்பு கிராமம் | | | | |
| 1. மாசியப்பிட்டி பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 75,000/= |
| 2. இளவாலை பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 60,000/= |
| 3. மாதகல் பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 20,000/= |
| 4. பெரியவிளான் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 12,000/= |
| 5. மாசியப்பிட்டி சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/= | 300/= | 1500/= | 10,000/= |
| 6. மாதகல் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 250/= | 300/= | 1500/= | 15,000/= |
| 7. மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 250/= | 300/= | 1500/= | 7,000/= |


*முக்கிய குறிப்பு:* **அத்துடன் கேள்விக்காரர் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையுடன் மேலதிகமாக வற்வரி 20%உம் சேர்த்துச் செலுத்துதல்வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.**

*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,*
*தலைமைச் செயலகம், மானிப்பாய்.*
*25.11.2002*

**வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்** (ஜே.பி.யு.எம்.)
தலைவர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(சி-25084)

# மாவீரர் நினைவாக மக்கள் அமைத்தவை...



கோண்டாவில் சந்தி
கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல வீதி
பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலிச் சந்தி

# முன்னாள் அமைச்சர் கதிர்காமருக்கு அமைச்சர் மகேஸ்வரன் 'அர்ச்சனை'!

அரச ஊழியர்களின் சம்பள மீளாய்வு தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட திஸ்ஸ தெய்வேந்திரா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கடும் விமர்சனத்திற்கு உள்ளானார். திஸ்ஸ தெய்வேந்திரா அதிமேதாவித்தனமாக



க் கருத்துக்களை வெளியிடுவது நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படை உரிமைகளையும் வரப்பிரசாதங்களையும் மீறும் ஒரு செயலாகும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட உறுப்பினரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இதனைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் ஸ்ரீ அந்ரா றெண்நெத்தி தலைமையில் சபை கூடியது.

வழமையான கேள்வி - பதில்களின் பின் கம்பஹா மாவட்ட எதிரணி உறுப்பினர் சிறப்புரிமை மீறல் சம்பவம் தொடர்பான விடயத்தை சபையின் முன் சமர்ப்பித்தார்.

அதாவது, கடந்த 6ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து நிதி அமைச்சர் கே.என்.சோக்ஸி ஆற்றிய உரைகள் தொடர்பாக திஸ்ஸ தெய்வேந்திரா விமர்சனம் செய்து கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இது தேசிய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது. இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறும் ஒரு செயல். இது தொடர்பாக இந்தச் சபை உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஜே.வி.பியினரும் பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் திஸ்ஸ தெய்வேந்திர கமிஷன் சிபாரிசின்படி ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்பதை மட்டுமே வலியுறுத்தி வந்தனர்.

சபை முதல்வரும் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சருமான டபிள்யூ. கே.எம்.லொக்கு பண்டார அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

திஸ்ஸ தெய்வேந்திரா இப்பொழுது பணியில் இருக்கும் ஊழியர்களுள் 30 வீதமானவர்களை வீட்டிற்கு அனுப்பியும் மற்றும் நிறுவனங்களில் ஆள்குறைப்பு செய்யப்படியும் சிபாரிசு செய்துள்ளார்.

இதை நாம் நடைமுறைப்படுத்தினால் சேவையில் இருந்து வெளியேற்றப்பட்ட ஊழியர்கள் வீதிக்கு வந்து போராட்டம் நடத்துவார்கள். அமைதியைக் குலைக்கும் திஸ்ஸ தெய்வேந்திரா அறிக்கையை நாம் நடைமுறைப்படுத்த மாட்டோம். இது ஜே.வி.பியினரின் சதித்திட்டத்திற்கு ஒரு பெரிய ஏமாற்றமாகிவிட்டது என்றும் அமைச்சர் லொக்கு பண்டார அப்பட்டமாகக் கூறிவிட்டார் என்பதும் சுட்டிக்காட்டப்படவேண்டிய ஒன்று.




இப்படியான ஒரு நிலையிலேயே திஸ்ஸ தெய்வேந்திரா, நிதி அமைச்சருக்கு சவால்விடும் வகையில் பேசியுள்ளார். இச்செய்தி பத்திரிகையிலும் வெளிவந்துள்ளது. இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாதப் பிரதிவாதங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும் என தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் சுட்டிக்காட்டினார். இதே கருத்தை நிதி அமைச்சர் சொக்ஸியும் வலியுறுத்தினார்.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பத்திரிகைச் செய்தி மறுபரிசீலனை செய்யப்படும் என சபைக்குத் தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் கூறினார்.

மதியபோசன இடைவேளையின் பின்னர் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார்.

ஒரு நாட்டில் அரசுகளும் ஆளுங்கட்சிகளும் மாறலாம். ஆனால், வெளியுறவுக்கொள்கை மாறக்கூடாது. இதனை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர் ஏ.சி.எஸ்.ஹமீது கடைப்பிடித்தார். பரஸ்பர ஆலோசனைகளையும் வழங்கினார். ஆனால், இன்றைய வெளிவிவகார அமைச்சர் இந்த உறவை முடித்துவிட்டார்.

எமது நாடு படிப்படியாக அணிசேராக் கொள்கையில் இருந்து நழுவி வருகின்றதோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தென்கிழக்காசிய நாடுகளுடனான உறவும் விரிசல் அடைந்துள்ளது. மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளில்தான் இலங்கையர்கள் பெருமளவில் தொழில்புரிகின்றனர். ஆனால், இந்த நாடுகளுடன் உறவைப் பலப்படுத்த அரசு தவறிவிட்டது என்று முன்னாள் அமைச்சர் கதிர்காமர் குறை கூறினார்.

புலிகள் தடை தொடர்பாக நான் வெளியிட்ட கருத்துக்களை சில பத்திரிகைகள் வியாக்கியானம் செய்தன. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. சமாதானப் பேச்சுக்களுக்கு ஜனாதிபதியோ அல்லது நானோ ஒரு போதும் முட்டுக்கட்டையாக இருந்ததில்லை. காரணம், இதனை ஆரம்பித்தவர்களே நாம்தான் என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் கூறினார்.

உடனே ஏட்டிக்குப் போட்டியாக ஏவுகணைபோல் எழுந்தார் இந்து சமய விவகார அமைச்சர் மகேஸ்வரன்.

சர்வதேச அளவில் அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஆனால், இந்த முன்னாள் அமைச்சர், ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் என்ற பெயரில் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறார். இது தமிழ்பேசும் மக்களுக்குச் செய்யும் ஒரு துரோகம். இது எல்லோருக்கும் அவமானம். எனவே, ஜனாதிபதியின் ஆலோசகர் என்ற பதவியில் இருந்து இராஜினாமாச் செய்யும்படி தமிழர்கள் சார்பில் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும், யாழ்.நூலகத்தைப் புனரமைப்பதற்கென வெளிநாடுகளில் இருந்து கிடைத்த பெருமளவான நிதியும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது இவருடைய காலத்திலேதான்.

இவை மட்டுமா? அமைச்சர் என்ற வகையில் முன்பு அனுபவித்த சகல சுகபோகங்களை இப்போது சும்மா எம்.பியாக இருந்துகொண்டும் அனுபவிக்கிறார். முன்பு வைத்திருந்த பல வாகனங்களையும் அரசிடம் திரும்பி ஒப்படைக்க மறுத்து வருகின்றார் என அமைச்சர் மகேஸ்வரன் காரசாரமாகச் சாடினார்.

லக்ஷ்மன் கதிர்காமர் இவற்றையெல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். எதையும் மறுக்கவோ, ஆட்சேபிக்கவோ இல்லை. அமைச்சரைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பியான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பேசினார். இன்று இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இடம்பெற்றிருப்பது ஒரு சரித்திரம் என்றார் அவர்.

இறுதியாக உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. அன்வர் இஸ்மாயில் வழமைபோல் புலிகள்மீது பாய்ந்து விழுந்தார்.



எந்தக் காரணங்கொண்டும் கிழக்கு மாகாணத்தில் இருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்படக்கூடாது. அதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இடமளிக்காது.

இன்று வடக்கு - கிழக்கில் இயங்கும் நீதிமன்றங்களின் தளபதிகள் இலங்கை நீதிச்சேவை கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்டவர்களா? அங்கு வாதிடும் சட்டத்தரணிகள் எங்கே பட்டம் பெற்றனர் என்று கேள்வி எழுப்பினார் அன்வர் இஸ்மாயில் எம்.பி.

இவற்றிற்கெல்லாம் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, இன்றைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், சர்வதேச நல்லுறவு சிறப்பாக உள்ளது. நாம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அணிசேராக் கொள்கையில் இருந்து மாறவில்லை. இதனாலேயே உலகநாடுகளின் உதவிகளும் அதிகரித்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

இறுதியில் சுற்றுலாத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகளும் விவாதிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன. (ஒ)

# புலிகளின் நீதிமன்றங்கள் பற்றி அன்வர் இஸ்மாயில் கேள்வி

புலிகளின் நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள், இலங்கை நீதி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவர்களா? அங்குள்ள சட்டத்தரணிகள் இலங்கை சட்டக் கல்லூரியில் படித்தவர்களா? எந்த அடிப்படையில் இவர்கள் இயங்குகிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வற்புறுத்தினார். அன்வர் இஸ்மாயில் எம்.பி. மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்கள் முழுமூச்சாக முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், வடபகுதி முஸ்லிம்களின் நிலைமை என்ன என்பது அந்த மக்களுக்கே தெரியாது. மாவட்ட நீதிமன்றமும் அழைப்பாணை அனுப்புகிறது. தமிழீழ நீதிமன்றங்களை அமைக்க அரசு ஒத்துழைப்பு வழங்கிவிட்டு நாடகமாடுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

சமாதானம் என்ற பெயரில் தனி ஆட்சிக்கான ஆயத்தம் செய்யப்பட்டு வருவதையே நாம் உணர்கிறோம். எந்தப் பாதுகாப்பும் இல்லாத முஸ்லிம் மக்கள் அச்சத்துடன் வாழ்கிறார்கள்.

எனவே, காரைதீவு போன்ற பகுதிகளிலுள்ள அதிரடிப்படை முகாம்கள் அகற்றப்படுவதை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் அனுமதிக்காது. வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு அரசினால் உத்தரவாதம் கொடுக்கப்படவேண்டும். அல்லது அப்பகுதி மக்கள் சரியான முடிவெடுக்கநேரிடும்.

நோர்வேயின்மீதான நம்பிக்கையை முஸ்லிம்மக்கள் இழந்துவிட்டனர். நோர்வே நாடகமாடுகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது -இப்படி அவர் கூறினார். (ஒ)

# சமாதான முயற்சிக்கு இன்று சர்வதேச ஆதரவு செயலில்!

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

சமாதான முயற்சிகளுக்கான சர்வதேச ஆதரவு இதுவரையும் வார்த்தை அளவிலேயே இருந்தது. ஆனால், ஒஸ்லோ மாநாட்டில் அந்த வார்த்தைகள் செயலாக மாறியுள்ளன.

சமாதானத்திற்கான சர்வதேச அங்கீகாரம் உயர்மட்டத்தில் கிடைத்துள்ளது என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.


'வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தொடர்ந்து பேசுகையில்:-

அரசுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் மிகவும் வெளிப்படையாக உள்ளன. இதனைப் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் ஏற்றுக்கொள்ளவில்லை.

புலிகள் இயக்கத்திற்கு சம அந்தஸ்துக் கொடுத்து பேசுவதையே ஏற்காத இந்தக் கட்சிகள், எவ்வாறு தமிழ்மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கப்போகின்றன என்று கேட்டார். (ஒ)

குறைந்த முதலீட்டில் உங்கள் வீட்டிலும் ஓர் அரிய பொக்கிசம், அகம் பற்றிக் கொள்ளுங்கள்



உலகத் தரம் வாய்ந்த IBM, Compaq நிறுவனங்களின் PI, PII கணனிகள் உங்களிற்காகவே யாழ் மண்ணில்

233MHz, 64Ram, Vibra sound card, CD rom, and Sound Box 22,000/=

For further details

STP
Your Partner in IT Solutions
T.P 2222674 54A, Palaly Road, Kantharmadam



# வாழ்த்துகின்றோம்

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி

திருமதி A.F.J.ரூபசிங்கம் அவர்களின்

25ஆவது ஆண்டு சேவை நிறைவையும்

50ஆவது அகவை நிறைவையும் பாராட்டி

அவருடைய சேவை மேலும் தொடரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

யாழ்.மாவட்ட வலை பந்தாட்ட சங்கம்,

யாழ்.மாவட்ட வலைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.

(11078)



கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

மாவீரர் நாள் நவம்பர் 27

மண்ணுக்கு உரமாகி, தமிழ் மக்களின் விடிவிற்காய் வித்தாகிய மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம். விடுதலை வீரர்களை வழிநடத்தும் தேசியத் தலைவரை வாழ்த்துகிறோம்.

எமது சங்க பல்வகைப்பட்ட சேவைகள்

- நுகர்ச்சி சேவை
- வாடகைச் சேவை
- வங்கிச் சேவை
- கலை கலாசார முயற்சிகள்
- தட்டச்சு போட்டோப் பிரதி சேவை

பணியாளர்கள், பணிப்பாளர்கள்,
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்

(C/25088)



# 13ஆம் வருட நினைவஞ்சலி



செல்வி சித்திரகலா அமரசேனாபதி

அன்னையின் மடியில்: 20.07.1984 | திதி: 27.11.2003 | ஆண்டவன் அடியில்: 20.11.1989

கண்ணீர்ப் பூக்கள்

ஆண்டுகள் பல ஆனாலும் ஆறாது எம் துயரம்
பூப்போல புன்னகைத்த உம் முகம்
நினைவுகளில் நீந்திவந்து உயிர் குடிக்கிறது
உன்னோடு நாம் இருந்த நிமிடங்கள்
எந்தப் பிறவியில் இனி வருவாயோ?
கலைத்துவிட்ட ஓவியமே! எம் சித்திரகலாவே!
பாசமுறு நெஞ்சங்களைப் பரிதவிக்க விட்டு பாதிவழியில்
பாசமலராய் வாடிச் சென்றாயோ?
உன் ஆத்மசாந்திக்காய் இருவிழிநீர் சொரிந்து
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.அமரசேனாபதி,
"சுதாபவனம்",
மயிலியதனை, தொண்டமனாறு.

உங்கள் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, ஆசை அண்ணா வசி, மாம்பழம் ஐயா குடும்பம், அம்மாச்சி மற்றும் உற்றார், உறவினர்கள்.

(11071)



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கற்பிக்கும் சக ஆசிரியை

திருமதி சு.கணேசன் அவர்களின் பாசமிகு தந்தையார்

வயிரவன் ஆழ்வார்

அவர்கள் 20.11.2002 அன்று காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.,
மீசாலை.

(11080)


## மாநகராட்சி பொதுக்கூட்டம்

யாழ்.மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு யாழ்.இந்து விடுதி மண்டபத்தில் யாழ். மாநகர முதல்வர் செ.கந்தையன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

## நியமனங்கள்

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.செயலக நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்ற கே.இராஜதுரை கோப்பாய்ப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு தற்பொழுது செயலக புனர்வாழ்வுப் பிரிவில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிவருகின்ற எஸ்.இராமச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த மாதம முதலாம் திகதியில் இருந்து இவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளவுள்ளனர். (ஒ-10)

## கசிப்புத் தடுப்பு நடவடிக்கை

கோண்டாவில் வடக்கு, கிழக்கு மற்றும் உரும்பிராய் மேற்கு, இணுவில் கிழக்கு போன்ற பகுதிகளில் கசிப்பு பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை, கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த இளைஞர்கள் மேற்கொண்டு வருகின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்த இளைஞர் குழு தமது குழு அங்கத்தவர்களிடம் நிதியினைத் திரட்டி கசிப்பினால் ஏற்படும் தீமைகள் பற்றியும் அதனால் ஏற்படும் கலாசாரச் சீரழிவுகள் பற்றியும் துண்டுப் பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டுள்ளனர்.

கசிப்பு உற்பத்தி செய்யும் வீடுகளுக்கும், கசிப்பு அருந்துவோருக்கும அறிவுரை கூறி வருகின்றனர்.(ஒ-ரி)

## மரக்காலை உரிமையாளருக்கு!

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் மர அரிவு ஆலை, மரக்காலை மற்றும் விறகு காலைகளின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஆனைப்பந்தியிலுள்ள அரசாங்க மரக்கூட்டுத்தாபன பிரதேச முகாமையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல காலைகளையும் பதிவு செய்வது சம்பந்தமாக ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச பொது முகாமையாளர் கேட்டுள்ளார்.(ஒ-5)


## உப அஞ்சலகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.27

தற்போது சிவன் பண்ணை வீதியில் இயங்கிவந்த வண்ணார்பண்ணை உப அஞ்சல் அலுவலகம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதிமுதல் இல.40, நாவலர் வீதியிலுள்ள புதிய கட்டடத்திற்கு இடம்மாற்றப்படவுள்ளது.

நாவலர் வீதி - காங்கேசன்துறை வீதிச் சந்திக்கு அருகில் யாழ்.மாநகரசபை மகப்பேற்று நிலையம் மற்றும் கிரிப்பிள்ளையார் கோயில் ஆகியவற்றிற்கு அருகில் இயங்கவுள்ள இந்த அஞ்சல் அலுவலகத்தில் தொலைநகல், தொலைபேசி வசதிகள் என்பன வழங்கப்படவுள்ளன. (ஒ-5)


சயன்ஸ் அக்கடமி



நல்லூர்
கல்வியாண்டு - 2003
தரம் 4முதல் O/L வரை,
இவ்விரண்டு பிரிவுகள்
அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.
(11072)



தொழிலாளர் தேவை

1. மேசன் (Masons)
2. தச்சுத் தொழிலாளர் (Carpenters)
3. வர்ணம் பூசுபவர் (Painters)

தகுதியுடையவர்கள் உடன் நேரல் வரவும்.

யூரோவில்,
840, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(11081)



யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

The Jaffna Education Centre

சாந்தி சினிமா முன்பாக (மேல்மாடியில்)

★ Spoken English with Grammer
★ சிங்களம்
★ Shorthand Typing ஆகிய பாடங்கள்

இரு மொழிகள்மூலம் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 28.11.2002

முடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும்.

நிர்வாகி
இ.லோகநாயகி.

(11065)



P.C. Paradise

நிறுவனத்திற்கு நன்றி நவில்கின்றோம்

தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர்களுக்கான தனிப்பட்ட கணனி கடன் திட்டத்தின்கீழ் எமக்கு வழங்கப்பட்ட கணனி கடனுக்கான தரமான கணனிகளையும், உதிரிபாகங்களையும் சலுகை விலையில் எமக்கு வழங்கி உதவிய Institute of Informatic Studies நிறுவன விற்பனைப் பிரிவான P.C.Paradise நிறுவனத்திற்கு நன்றி கூறுகின்றோம்.

தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்கள்,
யாழ்ப்பாணக் கிளை.

(11068)



"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்தின் பின்னும் என்னை மறவாதீர்கள்"

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

27.11.2002

மண்ணில் 14 - 05 - 1938



விண்ணில் 27 - 10 - 2002

பிரான்ஸிஸ்கா ஜோச் எட்வேட்

அமரத்துவமடைந்த

திருமதி பிரான்ஸிஸ்கா ஜோச் எட்வேட் அவர்களின்

மறைவை நினைந்து அன்னாரின்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின்.....

கண்ணீர் அஞ்சலி!

கண்ணை இமை காப்பது போல் காத்த மம்மியே! கள்ளமில்லா நன் மனத்தோய், கலங்கா கருங்காலியென மன உறுதியுடன், உன் மக்களனைவரையும் சான்றோராக்கி சபை முன்நிற்க வைத்தாய், ஐந்துயிரும் உன் நினைவால் வாடுகின்றோம். தெய்வத்தாயே எங்குற்றாய்! எங்கு சென்றீர் என ஏங்குகிறோம் உம்மக்கள். எமைக்கான ஓடோடி வாரும் எங்கள் மம்மியே! களங்கமில்லா உங்கள் நன்மனதை கர்த்தர் நன்கு அறிவார். தேவன் தன் திருவடியில் வைத்து உங்களைக் காப்பார். மம்மி கலங்குகின்றோம். கரைகின்றோம் தந்தையே காப்பாற்றிக் கொள்ளும் எங்கள் மம்மியை!

உற்றாரும், மாற்றாரும், உலகத்தாரும் போற்றிட உத்தமியாக வாழ்ந்த எங்கள் மாமியே அன்பின் திருவுருவே! அமைதியின் பிறப்பிடமே! அருமையுறும் மாமியே! எங்கு சென்றீர்? சுந்தரவதனமும், சோர்விலா உள்ளமும், சுறுசுறுப்பாய் உலாவிவந்த குலவிளக்கே! சுற்றம் கதறியழ எங்கு சென்றீர்? எங்கள் மாமியே கர்த்தரின் திருவடியில் சாந்தி அடைவீராக.

கனிவான மொழியால் கவர்ந்த எங்கள் அப்பம்மா, ஆசைமுகம் காட்டி, அன்புடன் வாரியணைத்துத் தெவிட்டாத பண்டங்கள் தந்தீர்களே! அப்பம்மா! அப்பம்மா எம்மை விட்டு யேசப்பாவிடம் சென்றீர்களா? நாங்கள் இனியாரை ஆசையுடன் அப்பம்மா என அழைப்போம்?

பால் தந்தீர்கள்! பயின்ற தவப்பயனைத் தந்தீர்கள்! அம்மம்மா!! பரிவோடு பழமாகி பலவும் தந்தீர்கள்! சீர் தந்தீர்கள், உடுப்புத் தந்தீர்கள்! உணவும் தந்தீர்கள்! செல்வங்கள் நாம் என்ன தருவோம்! செப்புவாயே! எங்கள் அம்மம்மா! நாங்கள் இனியாரை ஆசையுடன் அம்மம்மா என அழைப்போம்? யேசப்பா உங்களை அரவணைத்துக் கொள்வார்.

ஜெபம்

*இரக்கம் நிறைந்த இறைவா! உமது அன்பின் பாதையில் வழி நடந்து விண்ணுலகம் எய்திய* ***பிரான்ஸிஸ் ஜோச் எட்வேட்*** *அவர்களின் ஆத்துமத்தை நீதியின் காலத்தில், அமைதியின் இன்பத்தையும், ஊழியின் பொலிவையும் அருளி, மோட்ச பேரின்ப பாக்கியத்தையும் அருளும்படி வேண்டுகின்றோம்.*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: அ.அல்பிரட் யோகம்,
'யோகம்ஸ்',
மிருசுவில்.

(சி-25079)

# கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பாக நாடு திரும்பியதும் கருணாவுடன் பேசுவேன்!

## ஒஸ்லோவில் அமைச்சர் ஹக்கீம்

"கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பு பற்றிய விடயம் குறித்து புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணாவுடன் சந்திப்பு நடத்தி விரிவாக ஆராய்வது என தாய்லாந்துப் பேச்சில் முடிவு செய்யப்பட்டது. ஆனால், எனது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் நிலவிய சில உள்ளகப் பிரச்சினைகள் காரணமாக அது தாமதமாயிற்று; உடனடிச் சாத்தியமாகவில்லை. எனினும் ஒஸ்லோ மாநாட்டின் பின்னர் நாடு திரும்பியதும் கிழக்குக்குச் சென்று கருணாவுடன் இந்த விடயம் குறித்தும் பேசுவேன்."

- இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம். நேற்று முன்தினம் (திங்கட்கிழமை)ஒஸ்லோவில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் ஹக்கீம், மாநாட்டின் பின்னர் 'உதயனு'க்கு வழங்கிய செவ்வியில் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை விவகாரம் தொடர்பாக சர்வதேச சமூகம் சில முக்கியமான நிலைப்பாடுகளை எடுக்க இந்த மாநாடு வழிகோலியிருக்கின்றது.

வன்முறையைக் கைவிட்டால் தான் சர்வதேச சமூகத்தின் உதவி அரசுக்கும் புலிகளுக்கும் கிடைக்கும் என்ற திட்டவட்டமான செய்தி அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அரசு அடக்குமுறையைக் கைவிடுமானால் நாம் வன்முறைகளைக் கைவிடுவோம் என்ற நிபந்தனையுடன் கூடிய கைவிடுதல் அறிவிப்பை புலிகளின் சார்பில் அன்ரன் பாலசிங்கம் விடுத்ததும் முக்கியமானதாகும்.

இலங்கையில் ஜனநாயகம் முற்றாகத் திரும்ப வேண்டும். சர்வகட்சி ஜனநாயகம் பேணப்படுவதற்கான சூழலைப் புலிகளும், அரசும் உருவாக்க வேண்டும்; மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். இந்த உதவிகள் எல்லாச் சமூகத்துக்கும் சரிசமமாகக் கிடைக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது தான் இன்று சர்வதேச சமூகத்தின் நிபந்தனைகளாக - நிலைப்பாடாக - மாறியுள்ளது. இது நாம் எதிர்பார்த்த ஒன்று தான்.

இந்த மாநாட்டில் சில கட்டுப்பாடுகள், நிபந்தனைகளுடன் உதவியளிக்கத் தயார் என்று சர்வதேச சமூகம் தெரியப்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இது தற்போதைய சமாதான முயற்சிகளை முழு அளவில் ஊக்கப்படுத்தும் ஒரு திருப்திகரமான நிகழ்வு என்று கூறலாம்.

ஒஸ்லோவில் பிரதமர் - அன்ரன் பாலசிங்கம் சந்திப்புக்கு முன்னர் பிரதமருடன் நான் நீண்ட நேரம் கிழக்கு முஸ்லிம்களின் நிலை குறித்துப் பேசியிருந்தேன். சில விடயங்களை நான் அவரிடம் வலியுறுத்தியிருந்தேன். அவற்றை அன்ரன் பாலசிங்கத்திடம் பிரதமர் எடுத்துக் கூறியிருக்கின்றார்.

நானும் ஒஸ்லோவில் அன்ரன் பாலசிங்கத்துடன் இவ்விடயம் குறித்து உரையாடியுள்ளேன். சில நடவடிக்கைகளை எடுக்க இருதரப்பும் இணங்கியுள்ளன. நல்ல முன்னேற்றகரமான முடிவுகள் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

தற்போதைய சமாதான முயற்சிகளில் நாம் கணிசமான முன்னேற்றத்தை எட்டியிருக்கின்றோம் என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை எம்மால் உணர முடிகிறது. இன்னும் முன்னேற்றம் தேவை என அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

எனவே, இந்த சமாதான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கின்ற தரப்புகளுக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கின்றது. குறிப்பாக அரசும், புலிகளும் முஸ்லிம் சமூகமும் தங்களுக்குள் உள்ள பிணக்குகளுக்கு இணக்கமான தீர்வு காணவேண்டும். அப்படிக் கண்டால்தான் சர்வதேச சமூகத்தின் ஆதரவை - உதவிகளை - ஒத்துழைப்பை நாம் பெறமுடியும்.

சமாதான முயற்சிகள் தொடர்பான விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்குள் பிரிவு இருப்பதாக கூறுவது தவறு.

கிழக்கு மாகாண பாதுகாப்பு சம்பந்தமாக புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக - முஸ்லிம் காங்கிர

(18ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி செல்லும் பெற்றோருக்கு!

யாழ்ப்பாணம்,நவ.27

வன்னிக்குச் செல்லவுள்ள வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரரின் பெற்றோர்கள் அனைவரையும் இன்று காலை 8 மணிக்கு புலிகளின் வடமராட்சி அரசியல்துறை தலைமைக் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு செல்லவுள்ள பெற்றோர்கள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் சமுகமளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(மற்றொரு செய்தி 07 ஆம் பக்கத்தில்)* (ஐ-70)

## கம்பஹாவிலிருந்து குடாநாட்டுக்கு குழு

கம்பஹா மாநகர சபையைச் சேர்ந்த முதல்வர் தலைமையிலான 12 பேர் அடங்கிய குழுவொன்று இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகைதருகின்றது. (ஐ-5)



2002 ம் ஆண்டின் சிறப்புக் தள்ளுபடி COMPUTER விற்பனை

AMD 950 MHz
Gigabyte Mother Board
8MB VGA/ 32 Bit Sound
128 MB Memory
30.0 GB Hard Disk
1.44 MB Floppy Drive
ATX P4 Tower Casing
Key Board & Mouse
440W Speaker Set

29,500/= மட்டுமே!
ஒருவருட உத்தரவாதம்

கையிருப்பில் இருக்கும் வரை மட்டுமே...
இலகு கொடுப்பனவு வசதிகள்
விரைவான விற்பனைக்குப் பிந்திய சேவை

Free
உங்கள் தேவைக்கேற்ப அனைத்து Software களும் Install செய்து தரப்படும்.



Games விளையாடுவதற்கு
Internet & E-mail பார்ப்பதற்கு
New Software தேடுவதற்கு
Multimedia படங்கள், பாடல்கள்
Programs எழுதுவதற்கும், Packages பழகுவதற்கும்
இன்னும் பல....

எமது மேலதிக சேவைகள்

SALES:- Computer, Accessories, Printers, Scanners, UPS, Photocopier, & All other Electronic Equipments

REPAIRS & MAINTENANCE :- Installations, Network Maintenance, Computer repairs & Upgrading

SOFTWARE DEVELOPING & TRAINING:- Financial, Communication, Multimedia & Web Designing

SDS Computer Services
178 (114), Arasady Road, Kandarmadam, Jaffna.
Hotline : 0777- 726292 Tel : 021 - 2223251



ORGAN NOTES
புதிய, பழைய தமிழ் சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
Staff Notation மற்றும் ABC Notes உடன் பாடல்வரிகள்.
இசை பயிலும் மாணவர்களுக்காக இலகு முறையில் கணனியில் ஒழுங்கமைக்கப்பட்டது.
49, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
L.B.A.டயஸ் 0777-788127 (11098)



நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
யூத்
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்) (11083)



நிரஞ்சனாஸ் சங்கானை
அஜித், மீனா நடித்த
சிற்றீசன்
காட்சிகள்: 11.00, 1.45, 6.00 (புதியநேரம்) (C/24617)



Computer College
கணனிக் கல்லூரி
Center for Computer Studies
337, Kasthuriyar Road, Jaffna
E - Mail : collegeofcom@bharatmail.com
Phone & Fax : 021 - 2223497

கணனிக் கற்கைகள்
தமிழிலும் [illegible]
விளக்கக் குறிப்புகள்
இலகு கட்டண முறை
வசதியான நேர ஒழுங்கு
பிரத்தியேக [illegible]
கணனி பராமரிப்பு
கணனி விற்பனை
இணைய சேவைகள்

2004 உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கென கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுத் தகவல் தொழில் நுட்ப ( GIT ) பாடத்திட்டத்துக்கான கற்கைகளை யாழ்.மாவட்டத்தில் முதன்முதலாக ஆரம்பித்த பெருமையுடன் இரண்டாவது வருடத்தில் காலடி பதிக்கின்றோம்..

2005 பிரிவுகள்

15 - 12 - 2002 ஞாயிற்றுக்கிழமை
காலை - 10.00 மணி
மாலை - 3.30 மணி

ஏனைய புதிய பிரிவுகள் :
Diploma Courses :
Dip. in. Microsoft Office
Dip. in. Desktop Publishing.
Dip. in. Web Designing
Certificate Courses in:
Ms - Word, Ms - Excel, Ms - Power point, Ms - Access, Corel DRAW, PageMaker, Photoshop & Internet - E mail.

பள்ளிச் சிறார்கள் விடுமுறையை விருப்புடன் கழிப்பதற்காக டிசெம்பர் 01ஆம் திகதி முதல் முற்றிலும் வித்தியாசமான Kids Computing கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளது.

www.computercollege.ac.lk



அந்தியேட்டி அழைப்பு

29.10.2002 அன்று சிவபதமெய்திய திரு.ஐயா சின்னையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.11.2002) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. நாளை நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் கலந்துகொள்ளுமாறும் இதனை நேரிடையான அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சி.மகேந்திரன்
அதிபர், நாகர்கோவில் மகாவித்தியாலயம்.
(C/25103)



வணிக, முகாமைத்துவ, ATI பட்டதாரி மாணவர்களே!
நீங்கள் 2003 MARCH இல் நடைபெறும்
CMA PROFESSIONAL - 1
பரீட்சையில் தோற்றுவதற்கு நாம் ஒழுங்குகள் செய்து தருகின்றோம்
குறிப்பு :- 29.11.2002 இற்கு முன்னர் தொடர்புகொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளவும்..
CMA FOUNDATION STAGE
இற்கான புதிய அனுமதிகள் 29.11.2002இற்கு முன்பு ஏற்றுக்கொள்ளப்படும். அடிப்படைத் தகைமை G.C.E. (A/L) 2 பாடங்களில் சித்தி. பல்கலைக்கழக வெளிவாரி, ATI மாணவர்களுக்கு விசேட சலுகை.
தொடர்பு:- CAREER.COM INSTITUTE
NO. 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம் : தினமும் காலை 10 - 2.30வரை (C/25076)



தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம்
முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தின் வாகனங்களின் பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், புதிதாக வாகனங்களின் பதிவு எமது 24.11.2002 பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கமைய நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும், புதிதாக வாகனம் கொள்வனவு செய்யவுள்ளவர்கள் இந்த அறிவித்தலை கவனத்திற்கொள்ளுமாறும் வீண் ஏமாற்றத்தையும் பணச்செலவையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் இத்தால் கேட்டுக்கொள்கிறோம்.
(C/25102) - நிர்வாகம்



விளையாட்டுத் துறையில்
25 வருட சேவையை நிறைவு செய்து
50ஆவது அகவை கண்டு மகிழும்
யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி
திருமதி A.F.J.ருபசிங்கம்
அவர்களின் சேவை மேலும் மேலோங்க
உளமார வாழ்த்துகின்றோம்.
கூடைப்பந்தாட்ட
வீர, வீராங்கனைகளும்
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கமும்
(1100)



மரண அறிவித்தல்

திருமதி இராசம்மா செல்லையா

அல்வாயைப் பிறப்பிடமாகவும் 46, வைமன் றோட், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா செல்லையா நேற்று (26.11.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், திருமதி கமலாசனி சூரசங்காரன், மகேசன் (சட்டத்தரணி), பத்மநாதன் (முன்னாள் உத்தியோகத்தர், மார்பு நோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சூரசங்காரன் (சட்டத்தரணி) மற்றும் தவமணிதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் மாமியும், Dr. அன்பழகன், அருட்செல்வன், அன்புச் செல்வன், வத்ஸலா, அரவிந்தன், ஆராஅமுதன், ஆதவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2002) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*46, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.* (11097)

தகவல்:
செ.பத்மநாதன் (மகன்)

## கிழக்கு முஸ்லிம்....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஙக்குள் சில அங்கலாய்ப்புக்கள் - விசனங்கள் - விரக்தி ஆகியன இருந்தன என்பதுதான் அண்மைக்கால நிகழ்வுகளின் யதார்த்தமாகும்.

எம்மைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் ஓரளவு இணக்க நிலையைக் கொண்டு வந்துள்ளோம். முஸ்லிம்களின் இந்த அங்கலாய்ப்பை புலிகள் பூரணமாய் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கு பிரதேசம் முஸ்லிம்களினதும் தாயகம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வது உண்மையாக இருந்தால், முஸ்லிம்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை புரிந்து கொண்டு, எமக்கும் சுயாட்சி வேண்டும் என்ற வேண்டுகோளை அவர்கள் உள்வாங்கி ஓர் இணக்கத்தீர்வுக்கு வருவதற்கு அவர்கள் வழிஅமைக்க வேண்டும். நிரந்தர சமாதானத்துக்கு நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வழி கோல வேண்டும்.

முஸ்லிம் சமூகம் குறித்து புலிகள் உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றுமாகப் பேசக்கூடாது என்ற அங்கலாய்ப்பு முஸ்லிம்கள் மத்தியில் உள்ளது. நடைமுறையிலே கள நிலைவரங்களிலே சில மாற்றங்கள் வேண்டும்.

முஸ்லிம்களையும் சம உரிமையுள்ள பிரஜைகளாய் புலிகள் மதிக்க வேண்டும். முஸ்லிம்களின் அடிப்படை மனித உரிமைகள், அவர்களின் அரசியல் அபிலாஷைகள், சுயாட்சி சம்பந்தமான வேட்கை போன்றவற்றை புலிகள் சரியாக புரிந்துகொண்டு ஓர் இணக்கத்தீர்வுக்கு வரவேண்டும். இதற்கு புலிகளின் தலைமைத்துவம் வழிகோலவேண்டும். இது தான் முஸ்லிம் சமூகத்தின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு குறித்து விரைவில் புலிகளின் தளபதி கருணாவைச் சந்தித்துப் பேசவுள்ளேன். இந்தச் சந்திப்புத் தாமதமானதற்கு புலிகளின் தரப்பில் காரணம் ஏதும் இல்லை. எனினும் தாய்லாந்துப் பேச்சுக்களின் பின்னர் வன்னி சென்றிருந்த தளபதி கருணா, கடந்த 17 ஆம் திகதிதான் கிழக்குத் திரும்பினார். அதனால் 17ஆம் திகதி வரை சந்திப்பு நிகழ முடியாமல் போயிற்று. அதற்குப் பின்னர் எனக்கும் சிலவேலைகளும் நிர்ப்பந்தங்களும் ஏற்பட்டன. இதனால் சந்திப்புத் தாமதம் ஆயிற்று. நான் நாடு திரும்பியதும் நிச்சயமாக இந்தச் சந்திப்பு நிகழும். நாங்கள் இப்பிரச்சினைகள் குறித்து பேசி இணக்கத்தீர்வுக்கு வரலாம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

நோர்வே மாநாட்டில் கலந்து கொள்ளும்படி இந்தியாவை வற்புறுத்தவே நான் அண்மையில் இந்தியாவுக்குச் சென்றேன் என்ற சாரப்பட வெளியான செய்திகள் தவறானவை. இலங்கை முஸ்லிம்களின் அங்கலாய்ப்பு, எதிர்பார்ப்புக்களை இந்திய அரசு எவ்வாறு கணித்துள்ளது என்பதை அறியவும் எனது ஆலோசனைகளை - நிலைப்பாட்டை - இந்தியத் தலைமைக்கு தெரியப்படுத்தவுமே நான் அங்கு சென்றேன். இது சம்பந்தமாக இந்திய அரசு சில முன்னேற்றகரமான உத்தரவாதங்களை எங்களுக்குத் தந்திருக்கிறது.

நோர்வே உதவிவழங்கும் மாநாட்டில் இந்தியத் தரப்பில் பங்குபற்றுதல் - குறைந்த மட்டத்தில் - எதிர்பார்த்த தரத்துக்குக் குறைவாக - இருந்தாலும் கூட, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் பூரண ஆதரவு உள்ளது என்ற நம்பிக்கை எனக்குள்ளது. இதனை இந்தியப் பேச்சுக்களின் நான் தெளிவாக உணர்ந்துகொண்டேன்.

இந்தியாவின் பூரண ஆதரவும் ஆசீர்வாதமும் இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு சாத்தியப்படாது என்பதை அரசும் முஸ்லிம்களும் மட்டுமல்லாமல் புலிகளும் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தச் சமாதானத் தீர்வை எப்படியாவது இந்தியாவை ஏற்றுக் கொள்ளவைப்பதோடு சமாதானத் தீர்வுக்கு அனுசரணை வழங்கும் நாடாக அதனை நாம் மாற்றியமைப்பதும், நாம் அனைவரும் ஒன்றாக - கூட்டாக - செய்யவேண்டிய விடயமாகும் இப்படி ஹக்கீம் குறிப்பிட்டார். (ஐ)

## இத்தாலிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து சேர்ந்த இவர்கள், வேறு படகுகளில் ஏறுவதற்கு முயன்றபோது கைதுசெய்யப்பட்டனர். இக்குழுவில் அடங்கியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல் இது வரை வெளியாகவில்லை. (ஐ-3)




ஒஸ்லோவில் நடந்த சமாதான ஆதரவுக் கூட்டத்தில் அரசு, புலிகள், நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள்.

# புலிகளுக்கும், அரசுத் தலைவர்களுக்கும் எதிராக சபையில் எதிரணியினர் கோஷம்!

## கூச்சல், குழப்பத்தால் சபை 40 நிமிடங்களுக்கு இடைநிறுத்தம்

கொழும்பு,நவ.27

நாடாளுமன்றத்தில் நேற்றுக்காலை ஏற்பட்ட கூச்சல், குழப்பத்தை அடுத்து சபை சுமார் 40 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கும், பிரதமர் ரணில், அமைச்சர்களான மிலிந்த மொறகொட, ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கும் எதிராக எதிர்க்கட்சியினர் கோஷங்களை எழுப்பியதால் சபை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தின் போதே இந்தக் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

ஜே.வி.பி., பொ.ஐ.மு. உறுப்பினர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த சுலோக அட்டைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத் தலைவர்களுக்கும் எதிரான வாசகங்கள் அவற்றில் அடங்கியிருந்தன.

"ஒஸ்லோ கூட்டத்திற்கு புலி பாலசிங்கத்தை அழைத்துச்சென்ற ரணில் ஒரு தேசத்துரோகி", "ஒஸ்லோ கூட்டத்துக்கு புலிகளை அழைத்துச் சென்ற அரசாங்கத்திற்குப் பைத்தியம்", "ரணில், ஜீ.எல்., மிலிந்த துரோகக் கூட்டணி நாட்டைக் காட்டிக் கொடுக்கிறது.", "கிழக்கில் புலிகள் நீதிமன்றங்களையும் பொலீஸ் நிலையங்களையும் திறக்கும் பொழுது அரசாங்கம் சமாதான நித்திரையில்" என்ற சுலோக அட்டைகளை எதிர்க்கட்சியினர் தாங்கியிருந்தனர்.

புலிகளை அடக்கு, புலிகளின் பொலீஸ் நிலையங்களை மூடு, நாட்டைப் பிரிக்காதே என்றும் அவர்கள் கோஷமிட்டனர்.

சபைக்குத் தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித்தலைவர் சிறிஹந்திரா ஹென்னதி, சபையின் அமைதியை நிலைநாட்ட முயன்ற போதிலும் அமைதி ஏற்படவில்லை. இந்த நிலையில் காலை 10.32 மணிக்கு அவர் சபையை ஒத்திவைத்தார்.

சபை மீண்டும் முற்பகல் 11.10 மணிக்கு கூடியது. சபைக்குள் காணப்பட்ட சுலோக அட்டைகளை அகற்றும்படி சபைத்தலைவர் முதலில் உத்தரவிட்டார். சபை ஊழியர்கள் அவற்றை அகற்றினர்.

பின்னர் பௌத்தசாசன அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் சபையில் ஆரம்பமானது. (ஐ-3)

### களுத்துறைச் சிறையிலிருந்து

# உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்னர் நாற்பதுக்கும் மேற்பட்டோர் விடுதலை

## சிறைச்சாலை அத்தியட்சகர் தகவல்

கொழும்பு,நவ.27

களுத்துறைச் சிறைச் சாலையில் இருந்து கடந்த இரண்டு மாதங்களில் நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

அண்மையில் கைதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதத்தை அடுத்து சட்டமா அதிபரால் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய பலருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் வாபஸ் பெறப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

தற்போது வழக்குகளை எதிர் நோக்கியிருக்கும் 86 கைதிகளும், தண்டனை விதிக்கப்பட்ட 25 கைதிகளுமே களுத்துறைச் சிறையில் உள்ளனர்.

பல கைதிகள் விடுதலையாகிச் செல்லும் வாய்ப்புகள் இருந்த போதும் அவர்களது வழக்குகளைக் கையாளும் சட்டத்தரணிகள் பல வழக்குத் தவணைகளின் போது மன்றில் ஆஜராகாத காரணத்தினால் அந்தக் கைதிகளின் விடுதலை தாமதமாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் ஒன்பது கைதிகளும், வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள பெண்கள் பிரிவில் 7பெண் கைதிகளும் தற்போது உள்ளனர்.

களுத்துறைக் கைதிகளின் உண்ணாவிரதத்தை தொடர்ந்து நீதிமன்றில் இடம்பெற்ற வழக்குகளில் இரண்டு கைதிகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தொடர்பான வழக்குகளிலேயே இருவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ)

## தமிழர் தாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களினதும் கடற்கரும்புலிகளினதும் சிறப்புப் படையணிகளின் அணிவகுப்பு, தமிழீழ கடற்படையினரின் படகுகள் அணிவகுப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து தலைவர் பிரபாகரனின் உரை இடம்பெறும்.

தலைவர் பிரபாகரனின் உரை புதிய நேரப்படி இன்று மாலை 6 மணி 16 நிமிடமளவில் தொடங்கும். (புதியநேரம்) சுமார் 19 நிமிடங்கள் உரை இடம்பெறும். 'புலிகளின் குரல்' வானொலி தலைவரின் உரையை ஒலிபரப்பும். வெளிநாட்டு ஒலி, ஒளி பரப்பு நிறுவனங்கள் சிலவும் தலைவரின் உரையை ஒலி, ஒளி பரப்புச் செய்யவுள்ளன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானமுயற்சி தீர்க்கமானதொரு கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதால் புலிகளின் தலைவரின் இன்றைய உரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய இறுதிநாள் நிகழ்ச்சிகளையொட்டி வடக்கு - கிழக்கின் பல இடங்களில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. முக்கிய நிகழ்ச்சிகள் முல்லைத்தீவில் நடைபெறும்.

முல்லைத்தீவுக் கடலில் மிதக்கவிடப்பட்டிருக்கும், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஈகச்சுடர் மேடையில் சுடரேற்றி நிகழ்வுகள் நடைபெறும் என்று கடற்புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

(ஐ-9-10-15-180-17-72)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இதுவரையும் உரிய பதில் கிடைக்கவில்லை. இதனை அடுத்தே காணாமற்போனோர் சங்கம் இந்த மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

1996ஆம், 1997ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பான பூரண விவரங்களைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து பெற்றுத் தருதல் உட்பட பல கோரிக்கைகளைத் தாம் யாழ்.அரச அதிபரிடம் முன் வைத்திருந்ததாகவும் -

இதுவரையும் அவற்றுக்கான பதில் ஏதும் கிடைக்கவில்லை எனவும் - எஸ்.சற்குணம் மேலும் தெரிவித்தார்.

எனவே, தாம் யாழ். செயலகம் முன்பாக எதிர்வரும் 2ஆம் திகதியில் இருந்து தொடர் மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஒ-10)

## குளிக்கப் போன ஈ.பி.டி.பி. உறுப்பினர் விரட்டப்பட்டார்!

நெடுந்தீவு,நவ.27

நெடுந்தீவில் கடலில் குளிக்கச் சென்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்டார்.

தமது முகாமில் இருந்து சென்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் கடலில் குளித்துக்கொண்டிருந்த சமயம் அங்கு கூடிய மக்கள் அவருக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

இதையடுத்து குளிப்பதை நிறுத்தி விட்டு அரை குளியலில் வெளியேறிய அந்த உறுப்பினர் தமது முகாமுக்கு தப்பி ஓடினார் - என்று கூறப்பட்டது.

கடற்படையினரும் பொலீஸாரும் பார்த்து நிற்க பொதுமக்கள் அவரை விரட்டிச் சென்றனர். (ஐ-3)

## தென்மராட்சியில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.27

தென்மராட்சி கல்வி வலயத்தின் இவ்வாண்டுக்கான விளையாட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு.வ.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் இலங்கையர் கணேசன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். திருமதி கணேசன் ஆனந்தாதேவி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவார்.

(ஐ-5)

## பரீட்சை நிலையங்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.27

அடுத்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தென்மராட்சி கல்வி வலயத்தில் அமைக்கப்பட்ட 3 நிலையங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

☆ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பரீட்சை மண்டப இலக்கம் 2 சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் -

☆ பளை மத்திய கல்லூரி மண்டப இலக்கம் - 2 கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துக்கும் -

☆ பளை வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலையின் பரீட்சை மண்டபம் கொடிகாமம் அ.த.க.பாடசாலைக்கும் -

இடம்மாற்றப்பட்டிருக்கின்றன.

பரீட்சார்த்திகள் இந்த மாற்றத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு.வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ஐ-10)

## பலநாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் மார்கொட் வோல்ஸ்ட்ரோம், தாய்லாந்தின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் புசா குணசெம் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இலங்கைக்கு உதவி வழங்குவது, இலங்கையில் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணுவது, நிரந்தர சமாதானத்தை நிலைநிறுத்தி அபிவிருத்தி மேற்கொள்வது தொடர்பாக இச்சந்திப்புகளில் பேசப்பட்டது.

(ஐ-3)

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் தர்மசீலன்

*(மானிப்பாய் இலங்கை வங்கி கட்டட உரிமையாளர்)*

மானிப்பாய் வடகிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மசீலன் அவர்கள் நேற்று (26.11.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்) மற்றும் அற்புதம் தம்பதியரின் அன்பு மகனும், தர்சினி அவர்களின் அன்புக் கணவரும், ஆனந்தரூபனின் (தர்மரூபன் பல்பொருள் வாணிபம்) அன்புச் சகோதரரும், அபிலாசினி, பிரதாஜினி, கஜேந்திரன், தர்மேந்திரன், தர்சிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவஞானம் - சந்திரராணி தம்பதியினரின் மருமகனும், பிங்கலன், கல்யாணி, கலையரசி, தக்சினி ஆகியோரின் மைத்துனரும் கனகரத்தினம், கனகலிங்கம் ஆகியோரின் பேராமகனும் கபில்தேவின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2002) புதன்கிழமை பிப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*மானிப்பாய் வடகிழக்கு.*
*மானிப்பாய்.*

ஆனந்தரூபன் (சகோதரன்)
(1100) (தர்மரூபன் பல்பொருள் வாணிபம்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.